
இதழ் -17
16.01.2021
தூமி
பல்சுவை மின்னிதழ்
யாழ் வெள்ளம் 2020
ஒரு கண்ணோட்டம்
வானம் அழுதா தான்!!
மூன்றாம் கண்
பெருவெள்ளத்திற்கான பயணம்



# தை பிறந்து விட்டது!
# வழி பிறக்கப்போகிறது!




ஒரு நாள் ஏன் இருபத்துநான்கு மணித்தியால ங்களுக்குள் முடிந்துவிட வேண்டும்? புதிய ஒரு தொடக்கம் என்பது எங்கள் எல்லோருக்குமே அவசியமாகிறது. இன்றைய நாள் நன்றாக அமையாவிட்டால் நாளைய நாளில் நம்பிக்கை கொள்வோம். நாளைய நாளும் நன்றாக அமையாவிட்டால் அடுத்த கிழமையின் ஆரம்பத்தில் நம்பிக்கை கொள்வோம். அடுத்த கிழமையும் பிழைத்து விட்டால் அடுத்த மாதம், அடுத்த வருடம் என எமது நம்பிக்கைகள் நிறுத்தப்படாமல் வளர்ந்து கொண்டே போகின்றன.

புதிய நாள், புதிய கிழமை, புதிய மாதம், புதிய வருடம் இவை எல்லாம் புத்துணர்ச்சி தருபவை. புதிதாகப் பிறந்த ஒன்றோடு தன்னையும் சம்பந்தப்படுத்தி புதிதாக பிறக்க மனிதன் ஆசைப்படுகிறான். ஆனால் அவன் எங்கே இதுவரை வாழ்ந்தானோ, அங்கேதான் அந்த புதிய நாளிலும் வாழ வேண்டும். ஆனால் அந்த புதுமை அவனுக்கு ஆசிகளையும், அதிஷ்டத்தையும் தருமென உறுதியாக நம்புகிறான். இந்த நம்பிக்கை தான் அவனை வாழச்செய்கிறது. ஒற்றை இழையைத்தவிர மொத்தமாக அறுந்து விட்ட கயிறொன்றில் அந்த ஒற்றை இழையை இறுகப்பற்றி மேலெழுந்து வருவது தான் வாழ்க்கை.

மதங்களும், மாதங்களும், திதிகளும், திகதிகளுமென சம்பிரதாய வழக்கங்களுடன் கலந்த எங்களின் வாழ்க்கைமுறையின் அடிநாதம் நம்பிக்கை மட்டுமே. அந்த நம்பிக்கையை வலுப்படுத்தவே சில நெறிமுறைகளை வகுத்து வைத்திருக்கிறோம். அவ்வாறான ஒரு பழந்தமிழர் வழக்காறு தான் தைப்பொங்கல்.

ஐப்பசி, கார்த்திகை, மார்கழி என மழைக்கால மாதங்களால் இருண்டிருந்த வானம் வெளிக்கத் தொடங்கும் காலம் தை. ஆம்! தை பிறந்தால் வழி பிறக்கும்!

மார்கழியில் பிறக்காத வழியா தையில் பிறந்து விடப்போகிறது என்று எதிர்வாதம் செய்யாதீர்கள். பரமனை அறிந்தவர்கள் மட்டுமல்ல, பகுத்து அறிந்தவர்களும் ஏற்றுக்கொண்ட கூற்றுத்தான் "எண்ணம் போல் வாழ்க்கை" எங்கள் எண்ணங்கள் மீது நாம் காட்டுகின்ற உறுதியின் அடிப்படையில் தான் அவை செயலாகும் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன.

பிறக்கின்ற தை எங்கள் எல்லோருக்கும் கை கொடுக்கும் தையாக அமையப்போகிறது. பொங்கல் பானையில் பொங்கி வரும் பால் போல வாழ்க்கை மகிழ்ச்சியில் பொங்கப்போகிறது. கடந்த கால கசப்புக்களை மறந்து, சக்கரைப்பொங்கலாக வாழ்க்கை தித்திக்கப்போகிறது.

***எண்ணம் போல் வாழப்போகிறோம்!***
***எங்களை நாங்களே வாழ்த்துவோம்!***



இவ்விதழில்

# தமித்தலை...

04 வானம் அழுதா தான்
07 பார்வைகள் பலவிதம்
09 சிங்ககிரித் தலைவன்
11 பல்முளைத்தல்
13 அரசியலமைப்பு
15 தெய்வத்திருமகள்
16 யாழ் வெள்ளம்
19 வெப்பமடைகிறது பூமி
22 குறுக்கெழுத்து
23 ஈழச்சூழலியல்
26 அட்டைப்படம் பற்றி
28 வழுக்கியாறு
30 பிறந்தநாள் வாழ்த்து
33 மூன்றாம் கண்
36 சித்திரங்காவா
39 திரைத்தமிழ்
41 மெஸ்லி

துமி பல்கலை மின்னிதழ்
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06




இ. தனிஷ்ரன்

//மண்ணை நம்பி உழுது வைச்சு
மழையை நம்பி விதை விதைச்சு
உன்னை நம்பி நாமிருப்போம் சாமியே
உழவர் மண்ணை நம்பி இருக்குதிந்த பூமியே//

பொங்கல் - உழவர் திருநாள் - சூரியனுக்கு நன்றி சொல்லும் விழா.

"வியர்வை வடித்து சாகுபடி செய்து
நம் வயிற்றை நிரப்புபவராம் விவசாயிக்கு
வறட்சி போக்கி வருமானம் பெருக்கும்
வருணபகவான் வரமாம் விசும்பின் அழுகை போதை"

வானம் அழ ஆண்டவனை தொழுது நெல் விதைத்து நாற்று நட்டு, அது பயிரிலிருந்து தாள் பிரித்து கதிர் பிறந்து நெல் முற்றி தாள் காய்ந்து சாயும் வரை அதை பாதுகாத்து பின்னர் அறுவடை செய்து சூடடித்து மூடை கட்டி வீடு கொண்டுவந்து சேர்க்கும் வரை விவசாயி தவமாய் தவமிருப்பான்.

"நாத்தப் பறிச்சி நட்டுப் போடு
சின்னக் கண்ணு
தண்ணிய ஏத்தம் புடிச்சி
எறச்சி போடு செல்லக் கண்ணு
கருத நல்லா விளைய வச்சி
மருத ஜில்லா ஆள வச்சி
அறுத்துப் போடு களத்து மேட்டுல
சின்னக் கண்ணு
நல்லா அடிச்சி தூத்தி
அளந்து போடு செல்லக் கண்ணு"

இப்படியாக மாதங்களாய் காத்த நெல்லு வீடு வந்தால் தான் அவன் பசி தீரும். உலகத்தவரது பசியும் தான்.

"எண்ணிப்பாரு கொஞ்சம்
ஏர் பிடிக்கும் ஆள
சோத்தில் நாம கையை வைக்க
சேத்தில் வைப்பான் கால"

மிகவும் கடினமான வேலை என்றாலும் விவசாயிகள் அதனை வாழ்வியலாக கொண்டவர்கள் என்பதாலோ என்னவோ அவர்கள் மிகவும் ஜாலியாக அனுபவித்தே நெற்செய்கை செய்வார்கள்.

"ஐயாரெட்டு நாத்து கட்டு
அய்யாவோடு கூத்து கட்டு
யானை கட்டி ஏறு பூட்டு
வாய்க்கால் வெட்டி பாட்டு கட்டு
பம்பரமா சுத்தி கிட்டு
பகல் எல்லாம் பாடுபட்டா
விளைஞ்சதெல்லாம் வீடு வரும்
செல்லமே என் செல்லமே"

இந்த கொண்டாட்ட மனநிலையோடு தான் நெற்செய்கை நடக்கும். காரணம் அறுவடை






முடிந்தால் தைப்பொங்கல் எனும் கொண்டாட்டம் காத்திருக்கும். அதே நேரம் நெல்லு நன்றாக விளைய வேண்டுமென்று கடவுளையும் வேண்டுவார்கள். கடவுள் என்றால் நாகதம்பிரான், வைரவர் போன்ற சிறு தெய்வங்கள் தான்.

//பட்டி பெருக வேணும் தம்பிரானே
பாற்பானை பொங்க வேணும் தம்பிரானே
மேழி பெருக வேணும் தம்பிரானே
நாடு தழைக்க வேண்டும் தம்பிரானே
நல்ல மழை பெய்ய வேணும் தம்பிரானே
ஏர் தழைக்க வேணும் தம்பிரானே
எல்லோரும் வாழ வேணும் தம்பிரானே//



தைப்பொங்கல் நாள் நெருங்கி வர முதலில் பொங்கல் அடுப்பு செய்வார்கள்.
பொங்கலுக்கு ஒரு கிழமை முதல், வீட்டு நிலத்தில கொஞ்சம் ஆழமாக வெட்டி இறுக்கமான மண் எடுத்து அதற்கு தண்ணீர் விட்டு குழைத்து ஓரளவு களியாக்கி, பழைய சிறிய வாளி ஒன்றை அச்சாக வைத்து மூன்று அடுப்பு செய்வார்கள். செய்த அடுப்போடு ஈரம் காய நிழலில் வைத்து, இரண்டு மூன்று நாள் போக அந்த அடுப்பினை மேல் பக்கம் குவிவாக இருக்குமாறு மண் வைத்து முழு அடுப்பையும் மொழுகுவார்கள். அடுத்த நாட்களில் அதை அளவான சூரியஒளி படும் இடத்தில் வைத்து காய விட்டு மண் நன்கு இறுகியதும் நல்ல வெயிலில் காய விடுவார்கள். பொங்கலுக்கு முதல் நாள் அடுப்பை எடுத்து சாணத்தால் மொழுகுவார்கள். இப்படியாக சரிக்கட்டப்பட்ட அடுப்பில் தான் பொங்கல் பானை வைக்கப்படும்.

பொங்கலுக்கு நான்கு ஐந்து நாள் முதலே, வீடுகளில் பால்றொட்டி, முறுக்கு போன்ற பலகாரங்கள் சுடப்படும்.

பொங்கலுக்கு முதல் நாள் பொங்கலுக்கு வேண்டிய தேங்காய், பழங்கள்,பட்டு என்பவற்றை வாங்குவார்கள். பழங்களில் வாழைப்பழம், பலாப்பழம், மாம்பழம், விளாம்பழம், மாதுளை, கரும்பு என்பன முக்கியமானவை. பசும்பாலும் பல இடங்களில் முதல் நாள் இரவே வாங்கி குளிர்சாதனப்பெட்டியிலோ அல்லது, பால் போத்திலை வாளியில் வைத்து கிணற்றினுள்ளோ இறக்கி வைப்பார்கள்.

பொங்கல் நாள்.

//முற்றத்தை கூட்டி நீர் தெளித்து
சுற்றி வரக் கட்டு தோரணங்கள்
அற்புதமாய் நல்ல கோலமிட்டு
அதன் நடுவில் அடுப்பும் வைத்து
பசுவின் பாலை முழுதும் இட்டு
பக்தி பொங்க பானை ஏற்றி
பொங்கலோ பொங்கல் போற்றுங்கடி
பொங்கிடும் பொங்கலை வாழ்த்துங்கடி//

விடிய வெள்ளண, ஐந்து மணிக்கே எழுந்து குளித்து முழுகி, கோலம் போட்டு அடுப்பு வச்சு கும்பம் வச்சு, அடுப்பு மூட்டி அளவா தண்ணி விட்டு அதோட பானையை அடுப்பில வைப்பார்கள். பின்னர் அதில் பால் விட்டு கொதிக்க விடப்படும். பால் பொங்கிச்சரிய

"பொங்கலோ பொங்கல்
பொங்கலோ பொங்கல்
பொங்கலோ பொங்கல்
தை பொங்கலும் வந்தது
பாலும் பொங்குது
பார்த்து சொல்லடியோ"



பொங்கலோ பொங்கல் என்றவாறு ஏற்கனவே நெல்லு குத்தி தீட்டி வைத்திருக்கும் அரிசியை பானையை மூன்று தரம் சுற்றி பின்னர் உலை நீரில் போடுவார்கள். அப்படியே, மேலதிக நீரை அகப்பையால் அகற்றி ஒரு பாத்திரத்தில்



எடுப்பார்கள். பொங்கிச்சரிய சின்னஞ்சிறுசுகள் வெடி கொளுத்துவார்கள். சந்தோஷம்.

//பூரண கும்பம் முற்றதிலே பால்
பொங்கி வழியுது பானையிலே
ஆதவன் பகலவன் இரவி சூரியன்
அருளை இரஞ்சி கும்மியடி//

அரிசி அவிந்து திரண்டு வர மேலும் பால் சேர்க்க வெண்பொங்கல் தயாராகும். சக்கரை பொங்கல் வேண்டுமென்றால் பொங்கல் திரண்டு வரும் பொழுது சக்கரை தண்ணீர் சேர்த்து கிளற சக்கரை பொங்கல் வரும். வெண்பொங்கல் செய்யும் வீடுகளில் கூடவே அதற்கு சாம்பாரும் அருகிலேயே வைக்கப்படும். கூடவே வடை, மோதகம் என்பனவும் செய்யப்படும்.

//முத்தான நெல்லின் மணிகளோடு
முந்திரிகை வற்றல் சேர்ந்தினிக்கும்
சத்தான பயறும் கலந்தவிந்த
சர்க்கரைப் பொங்கலாய்
வாழ்வினிக்கும்//

அனேகமாக சூரியன் உதிக்க ஆரம்பிக்கும் பொழுது, ஏழு மணிக்கு முதலே பொங்கல் முடிந்து விடும். பின் பொங்கல், பலகாரம், பழங்கள், வெட்டு இளநீர் அத்தனையும் மடை பரப்பி சூரியனுக்கு படைத்து தேவாரம் பாடி தீபம் காட்டி சாம்பிராணி போட்டு பூசைகள் முடியும். படைத்தவற்றில் கொஞ்சம் கொஞ்சம் சிறு வாழையிலையில் எடுத்துக்கொண்டு மேற்பக்கமாக குங்குமம் தடவப்பட்ட வெட்டு இளநீரையும் கத்தியும் கொண்டு சென்று படையலின் பகுதியை படலைக்கு வெளியே வைத்து வெட்டு இளநீரை பிளந்து வைத்துவிட்டு வருவார்கள். அது பறவைகள், விலங்குகளுக்கான படையல்.

"தங்கச்சூரியனே எங்கள் மனசிலே புதிசா ராகம் பொங்கும் எரிமலையே உந்தன் செயலில புயலா வேகம்"

அதன் பின் படைத்த அத்தனையிலுமிருந்து இன்னொரு சிறு பகுதியை எடுத்து பொங்கல் கஞ்சித்தண்ணீரினுள் சேர்த்து கலக்கி, அந்த நீரை வீடு, வளவு, கிணறு முழுவதும் தெளிப்பார்கள். இத்தோடு சடங்குகள் நிறைவடைய இனி நாங்கள் பொங்கல் சாப்பிடலாம்.

"பகலவன் பல்லிழிக்க முதல் படுக்கை துயில் நீங்கி
பாப்பையா பட்டிமன்றத்துடன் பிகிலும் பார்த்து பக்கத்துவீட்டுப் பொங்கலுடன் பொழுதை கழிக்க இருந்த என்னை....."

இப்படி பொங்கலுக்காய் காத்திருக்கும் அயலவர்க்கும் கொடுத்துப் பரிமாறி அந்தநாள் நிறையும்.

இப்படியான இந்த கொண்டாட்டம் தான் தமிழருக்கு புத்தாண்டு. தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற நம்பிக்கையும் பழையன கழிதலும் புதியன புகுதலுமே வாழ்வு என்ற தத்துவத்திலும் தைப்பொங்கல் புதிய மனிதர்களாய் மீள பிறக்கவும் உலகமும் நமது வாழ்வும் புத்துணர்ச்சி பெறும் நாளாக இன்னும் இன்னும் கொண்டாட்டத்துக்கு உரியதாகிறது.

"தை பொறக்கும் நாளை விடியும் நல்ல வேளை
பொங்கப்பாலு வெள்ளம் போல பாயலாம்
அச்சி வெல்லம் பச்சரிசி வெட்டி வச்ச செங்கரும்பு
அத்தனையும் தித்திக்கிற நாள் தான்....ஹோய்"



# பார்வைகள் பலவிதம்

என்னவளின் கோபம் போல
என்னவளின் அழுகை போல
ஆழத்தில் கிடந்ததையெல்லாம்
கொட்டி விட்டது இந்த வெள்ளம்!

ச. இனியவன்

வண்டியின்
திறப்பை வாங்கி
வைத்து விட்டு
போ போ
என துரத்தும்
அவளைப்போல
போகும் பாதை
எல்லாம் அடைத்து
விட்டு
போ போ
வெள்ளமே
என்றிருக்கிறோம்.

மொழியருவி

நீந்தி வரும் நீர் அதன்
நீட்சியை நிறுத்திய
தேங்கிய மானுட தேவைகள்
நீங்கிய போது தான்
நீர் இங்கு மோட்சம்
கண்டது......

பரன்

ஒவ்வொரு மனிதனும்
சமூகக் குருதியின் துளி.
ஒவ்வொரு துளியிலும் சமூகத்தின்
சாரம் அடங்கியிருக்கும்.
அதேபோல் சமூகத்தின்
ஒவ்வோர் அழுக்கிலும் ஒவ்வொரு
மனிதனுடைய பங்கும்
அடங்கியிருக்கிறது.

வெள்ளம் வருமுன்னே அணை
கட்ட வேண்டும். இது பழையோர்
கதை. சரி. புதுக்கதை
என்ன? வெள்ளம் வடிந்து
பின் காரணங்கள் தேடுவோம்.
கண்டுபிடித்தோம். கால்வாயில்
குப்பைகள்!

யார் போட்டது? நானா? இல்லவே
இல்லை. நீங்களா? நிச்சயமாக
இல்லை. அது "யாரோ
ஒருவர்கள்" சனங்கள் !

எதையும் நாம்
ஏற்றுக்கொள்ளாதவரை எதுவும்
மாறிவிடப் போவதில்லை.
நாம் செய்ய மறந்தவைகளை விட
மறந்து செய்துவிட்டதற்கே
வலிமையான விளைவுகள்
கிடைக்கிறது.
சிந்திப்போம். முன்னேறுவோம்.
நாம் மனிதர்கள்!

வினோ



புகைப்படம் : தவம் சுதர்சன்

வடிகால் மீது நீர்
கொண்ட காதலை
பிடியாத சிலர்
பார்த்திட்ட
வேலைகள்
இக் குவளைகள்........

குரு

கழிவுகளை கண்ட
கண்ட இடமெல்லாம்
எறியும் மனிதா
நீர் புகும் கால்வாயை கூட
நீ
விட்டு வைக்கவில்லையா
உன் அழிவிற்கு நீயே
உரமிடுகின்றாயே

சி.நிருஜன்

திட்டம் போட்டு சுத்தம்
செய்யாமல் விட்டாலும் கூட
பரவாயில்லை.
இப்படி சுத்தம் செய்யாம
விடுறதுக்கு திட்டம் போடாம
விட்டாலே போதும்.

தி. சேந்தன்

குப்பைகளை வீதியில்
வீச வேண்டாம் என்றீர்கள்.
கால்வாய்களுக்குள் வீச
வேண்டாம் என்றீர்களா?
குப்பைத்தொட்டிகள்
குழந்தைகளுக்கானது.
குப்பைகளுக்கல்ல!!!

கரன்

தமிழைப் படிங்கடா..
அது பிளாஸ்டிக் ஒளிப்பு
இல்லடா.. ஒழிப்பு!!!

ஜோதி

“உவ்வளா குப்பையும் உதுக்க கிடந்ததோ?கடவுளே! இதானே எங்கட சனத்தின்ட வேலை. இதுகள திருத்தவே ஏலாது..

ஆனா ஒண்டு தம்பி, வெளிநாட்டிலயெல்லாம் உப்பிடியில்லை. நான் என்ர கடைசி மேன் கனடால தானே இருக்கிறான். அப்ப அவன் ஒருக்க கூப்பிட்ட இடத்த சும்மா போய் வந்தனான்? எங்க??? கனடாக்கு..
அங்க வந்தடாதம்பி சின்னக்குழந்தை குஞ்சுகள் கூட ரோட்டுவழிய குப்பை போடாதுகள். ரோட்டில கான் என்டொண்டு கிடக்கெண்டே தெரியாது. கானெல்லாம் அப்பிடிச் சென்ற் அடிச்சமாரி வாசம்வரும். ஓஓஓ.. அப்பிடி அங்க.. இங்க பார் இதுகள... என்ன இருந்தாலும் வெளிநாடு வெளிநாடுதான்...’

‘அதுக்கென்னய்யா செய்யிற.? எல்லாரும் வெளிநாடெண்டு போனா இங்க கிடக்கிறதுகள ஆர் பாக்கிறது? சரி அத என்னத்த கதைச்சு.. அதென்னையா கையில புதுசா ஒற்றை ஒண்டோட திரியிறியள்’

‘இதோ.. இதுவும் கனடால இருந்து வரேக்க கொண்டந்ததான் தம்பி. சும்மா மூஞ்சையள் துடைக்க பாவிக்கிறது. சீலைத்துண்டெண்டா அடிக்கடி தோய்க்கோணும். இதெண்டா வசதி, துடைச்சுப்போட்டு அப்படியே தூக்கியெறியலாமாம்’

‘எங்கையா எறிவியள்? ‘

‘அது போற போக்கில எங்கினயும் ரோட்டுவழிய எறியிறதான்.....’

இராவி நவிலன்

இவை வெறும் பிளாத்திக்கு கழிவுகள் அல்ல அதனைத்தாண்டி நாம் சிந்திக்க வேண்டியது ஒன்று உள்ளது. இங்கு காணப்படுபவை பெரும்பாலும் குடிநீர் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் பிளாத்திக்கு போத்தல்கள் ஆகும். சுத்தமான குடிநீர், தூய வளி என்பவை அனைத்து உயிர்களதும் அடிப்படைத் தேவையாகும். அனைவருக்கும் இலவசமாக கிடைக்க வேண்டியதாகும். அதனை பாதுகாத்து அனைவருக்கும் கிடைக்கச்செய்ய வேண்டியது பொது மக்களின் பொறுப்பும் அரசின் கடமையும் ஆகும்.

இயற்கை அருவிகளை மாசாக்கி அழித்துவிட்டு உடலுக்கு பாதகம் என மருத்துவம் கூறும் பிளாத்திக்கு போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீரை வாங்கிப் பருகுவதை பெருமையாக நினைக்கின்றனர் சிலர். எதிர்காலத்தில் சுவாசிக்கும் காற்றும் பிளாத்திக்கு பைகளில் அடைக்கப்பட்டு விற்பனைக்கு வரும் காலம் வெகு தொலைவில் இல்லை. ஆழமான சிந்தனையும் தூரநோக்கான செயற்பாடுமே இதற்கான தீர்வாக அமைய முடியும்.

மகி

## அடுத்த இதழுக்கான சிந்தனை...



இந்த படத்திற்கான உங்கள் பார்வையை உலகம் பார்க்கச் செய்ய எழுத்துக்களாக்கி எமக்கு அனுப்பி வையுங்கள்

thumi2016@gmail.com

www.facebook.com/Thumi06

## நம்பிக்கை ஒளி!

# ஜீவா ஷஜீவனின் சிங்கிரித்தலைவன்!

ஆட்சி 17

மழை தன் கோரத்தாண்டவத்தை சற்று தணித்திருந்தது!

அரண்மனை வளாகத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த மக்கள் தமக்குள் எழுந்த ஆயிரம் கேள்விகளை யாரிடம் கேட்பது? என்பதை தாண்டி எதிர்வரும் நாட்கள் எவ்வாறு அமையுமோ என்ற ஒருவித திகிலால் வெலவெலத்துப்போய் இருந்தனர்! சிலரோ தமக்கு அருகில் இருப்பவர்களிடம் நாட்டு நிலை பற்றிக் கேட்பதும், தாதுசேனரைப் பற்றி விசாரிப்பதுமாக காலம் போக்கினர் ... அனால் அவ்விடையங்கள் குறித்து, எவருக்கும் பதில் தெரியாதிருந்தது... 'யாரிடம் பதில் கிடைக்கும்?' என்று அடுத்த தேடலுக்கு அவர்களுக்கு, நேரமோ அவசியமோ இருக்கவில்லை... இக்கட்டான சூழலில் தமக்குக் கிடைத்த புகலிடத்தையும், உணவையும், தற்போது அரச அரியணையில் இருப்பவரின், ஆதரவான வார்த்தைகளையும் எண்ணி திருப்தியடைந்திருந்தனர்!

இந்த ஆதரவு அரசிடம் இருந்து கிடைப்பது சாதாரண குடிமக்களுக்கு பெரிய விடயம்தானே!

ஆனால் அரச குலத்தினரிடம் , நாட்டின் எதிர்காலம் குறித்த கேள்வி இருந்தது! அதை வெளிப்படையாக வெளிப்படுத்தியவர்கள் எல்லாம் அரண்மனையைவிட்டு வெளியேற்றப்பட்டதை நேரில் பார்த்தவர்கள் ஆதலால், வெளிப்படையாக வெளிப்படுத்தாமல், பகிரங்கமாகவே, பலர் காசியப்பனை ஏற்றிருந்தனர்!

கல் போன்ற அவனது நெஞ்சத்திலும் கசிவு இருக்கும் என்று அவர்களுக்கு தெரியும்!

அன்பையும், ஆதரவையும், அங்கீகாரத்தையும் எதிர்பார்த்தவன் காசியப்பன்!

அது கிடைக்காதபோது அதை அடைந்து கொள்வதற்கு அவன் எடுத்த முயற்சிகள் ஆபத்தானவை... கொடூரமானவை... அரச நடைமுறைகளை மாற்றி, ஒருவன் ஆட்சிக்கு வருவதென்பது அவ்வளவு எளிதான விடயம் அல்ல! ஆனால் காசியப்பனைப் பொறுத்தவரையில், நாட்டு, அரசியலின் சந்தர்ப்பம் சூழ்நிலைகள் அவனுடைய எண்ணத்தை நிறைவேற்றுவதற்கு ஏதுவாகவே அமைந்திருந்தன!

அவனை எதிர்த்துக் கேள்வி கேட்பதற்கு அந்தச் சூழ்நிலையில் அரண்மனையில் யாரும் இருக்கவில்லை! படைத்தளபதியும் வீரர்களும் அவனின் பெரும்பலமாக துணை நின்றனர்!

அரியணை ஏறுவான் என எல்லோரும் எதிர்பார்த்திருந்த முகலன், இப்போது தன் பரிவாரங்களோடு அந்தக் குன்றுப் பகுதியில் இருந்து, ஆற்றைக் கடப்பதற்காக இறங்கிக் கொண்டிருந்தான்!

தூரத்தே மகாநாமரின் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒற்றன், ஏமநாகன் முழுமையாக நனைந்தபடி மூச்சிரைக்க ஓடிவந்து,

"மன்னிக்க வேண்டும் இளவரசே! ஒரு துயரமான செய்தியை தாங்கி வந்திருக்கிறேன்..."

"என் தந்தையோ, உடல் இயலாமல் இருக்கின்றார்... என் தந்தை போல் என்னை காத்து நின்ற மகாநாமரும் காசியப்பனால் கடத்தப்பட்டு, என்ன ஆனார் என்பதே, தெரியாமல் இதோ... இந்த ஆற்றைக் கடக்க முடியாமல் துன்பப்பட்டு கொண்டிருக்கின்றேன்! இதை விட ஒரு பெரிய துன்பியல் செய்தி எனக்கு வேறென்ன இருக்கப்போகிறது..? தயங்காமல் கூறு..."

"மன்னிக்க வேண்டும்... இளவரசே மன்னர் தாதுசேனன்.."

என்றவன் அடுத்த வார்த்தைகள் வர முடியாமல் திணறினான்... தந்தையின் உடல்நிலையை அறிந்திருந்த முகலன், ஏதோ அசம்பாவிதம் நடைபெற்று விட்டது என்பதை உணர்ந்த முகலன், நாகன் அருகில் சென்று அவன் தோள்களை பற்றியபடி என்ன நடந்தது கூறு... என்று சற்று தளதளத்தகுரலில் வினவினான்.

“இளவரசே தங்கள் தந்தை புத்தனின் திருவடிகளை அடைந்து விட்டார்... நீங்களும் மந்திரி மகாநாமரும் இல்லாத சமயத்தில் தங்கள் தமையனார், தந்தையாரை தந்திரத்தால் அழைத்துச்சென்று கொலை செய்ததாக, என் நம்பிக்கைக்கு பாத்திரமானவர்கள் தெரிவிக்கின்றார்கள்! மேலும் மகாநாமர் கடத்தப்பட்டார் என்கின்ற செய்தியானது, தங்களை ஒரு சூழ்ச்சி வலைக்குள் விழுத்திவிட்டு, காசியப்பரும், தளபதி மீகாரரும் தமது நீண்ட நாள் திட்டத்தை நிறைவேற்றி இருக்கிறார்கள்!!”

இடியென இறங்கிய இந்த வார்த்தைகள், முகிலனின் இதயத்தை இறுக்கியது!

“ஐயோ தந்தையே..”
என்று கத்தியபடி தன தலையில் அடித்துக்கொண்டு அழுதான்! தன் மீது அளவு கடந்த அன்பையும் அன்பையும் அக்கறையையும் கொண்டு வளர்த்த தன் தந்தைக்கு நிகழ்ந்த இந்தக் கொடுமையை எண்ணி கோபத்தாலும் கவலையாலும் அவன் செய்வதறியாது நின்றான்!

வீரர்கள் ஒவ்வொருவரும் தமக்குள் சலசலத்துக்கொண்டு ஆரவாரப்பட்டனர்!

தலைமை வீரன், முகலன் அருகில் வந்து கூப்பிய கரங்களோடு, “மன்னியுங்கள்... இளவரசே இந்த நேரத்தில் நாம் நிதானமாக யோசிக்க வேண்டும்... மன்னருக்காக நாமெல்லாம் ஒன்றாக இறைவனிடத்தில் பிரார்த்திப்போம்! எம்மையெல்லாம் வழி நடத்துகின்ற மாதவன் நிச்சயம் வழி காட்டுவான்!”

என்று ஆறுதல் வார்த்தைகள் கூறினான்.

காரிருள் மேகங்கள் சூழ்ந்த, அந்தப் பகுதியை சோகமும் மேகமாகச் சூழ்ந்துகொண்டது!

ஒற்றன் ஏமநாகனுடைய பார்வை சற்று தூரம் சென்று நிலைத்தது! அவன் முகத்தில் ஒரு நம்பிக்கை ஒளி படர்ந்தது!

“இளவரசே கலங்கவேண்டாம் அதோ.... எங்கள் நம்பிக்கை ஒளி! எங்கள் வழிகாட்டி! மகாநாமர் வந்து கொண்டிருக்கின்றார்!!” என்று தன் கையை தூரே நீட்டிக்காட்டினான்!

அவன்காட்டிய திசையை எல்லோரும் ஆவலோடு பார்த்தனர்... ஒரு யானை தன் முதுகில் மகாநாமரையும், இன்னுமொருவனையும் சுமந்தபடி நீர் பெருகியோடும் ஆற்றை லாவகமாக கடந்துகொண்டிருந்தது...


அந்தக்கரையிலே மகாநாமருடன் சென்ற சில பிரதானிகள் ஆற்றைக்கடக்க முடியாமல் கரையிலேயே நின்றவண்ணம் மகாநாமரை சுமந்து போகும் யானையை பார்த்தவண்ணம் நின்றனர்...

மகாநாமரைக்கண்டதும் முகலனின் கண்களில் இன்னொரு ஆறு பெருக்கெடுத்து ஓடியது... வீரர்கள் எல்லோரும் கலங்கி நின்றனர்...

சற்று நேரத்தில் தன்னைச் சுதாகரித்துக்கொண்ட முகலன் அவசரஅவசரமாக குன்றில் இருந்து கீழ் இறங்கினான்... வீரர்கள் விரைந்து உதவினர்..! குன்றில் இருந்து விரைந்து ஆற்றின் கரைக்கு ஓடிய முகலனை வீரர்களும் தொடர்ந்து ஓடினர்... திடீரென ஒரு வீரன்,

“அந்தோ மன்னர்...!” என்று ஓலமிட்டான்!

தொடரும் ...



# பற்கள் முளைத்தலும், பராமரிப்பும் Teething and Dental Care

மருத்துவம் போற்றுதும்

சஜீவன் சத்தியசீலன்,
பல்மருத்துவ பீடம்,
பேராதனைப் பல்கலைக்கழகம்

## பற்கள் முளைத்தல் என்றால் என்ன?



- பற்கள் முளைத்தல் என்பது ஒரு குழந்தையின் முதல் பல்வரிசை ஈறிலிருந்து வெளியே தெரியத் தொடங்குவதாகும். அவ்வாறு முதலில் முளைக்கும் முதல் 20 பற்கள் முதற் பற்கள் அல்லது பாற் பற்கள் என்று அழைக்கப்படும்.

-இது ஒரு இயற்கையான நிகழ்வாகவும் கொண்டாட்டத்திற்கு உரிய நிகழ்வாகவும் இருக்கிறது. பல் கொழுக்கட்டை அவித்து அதை ஒரு விழாவாகவே கொண்டாடும் பாரம்பரியம் எம்மிடையே இருக்கவே செய்கிறது.

- சில குழந்தைளிற்கு பிறக்கும் போதே பற்கள் சில காணப்படலாம் அவற்றை Neonatal Teeth என்று அழைப்பர். அத்தகைய பற்கள் உறுதியற்றவையாக காணப்படுதலினால் தானாக உதிர்ந்து விடும். சில சமயங்களில் அவற்றை அகற்ற வேண்டிய கட்டாயமும் உள்ளது.

> [ஆரோக்கியமான பற்கள், உங்கள் குழந்தையின் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தை முழுமையாக்குகின்றன.]

-பற்கள் முளைக்கும் பொழுது குழந்தைகள் வலியினை அனுபவிக்கும். எனவே இந்த பற்கள் முளைக்கும் காலம் ஒரு கடினமான காலப்பகுதியாக இருக்கும். குழந்தைகள் வழக்கத்துக்கு மாறாக அழக்கூடும், கிளர்ச்சி மற்றும் பரபரப்பு அடையக்கூடும் மற்றும் எச்சில் வடிக்கக்கூடும். தூக்கக் குழப்பமும் ஏற்றப்படக்கூடிய சந்தர்ப்பங்கள் உள்ளது.

- வலி காரணமாக எதையாவது மெல்ல வேண்டும் என்ற உணர்வு குழந்தைக்கு ஏற்படுமாதலால் குழந்தை விரலை அடிக்கடி வாய்க்குள் கொண்டு போவதையும் அவதானிக்க முடியும்.

-ஆயினும்,பெரும்பாலான குழந்தைகளுக்கு எந்த விதமான அறிகுறிகளும் இல்லாமலே பற்கள் முளைத்து விடுகின்றன.

## பற்கள் முளைப்பதினை எவ்வாறு கண்டுபிடிப்பது?

பெரும்பாலான குழந்தைகள் பற்கள் முளைத்தலை உணர்ந்து அதற்கான அறிகுறிகளைக் காண்பிப்பார்கள். பற்கள் வெளியே வருவதினை சில அறிகுறிகளை வைத்துக் கண்டறிய முடியும்,

1. சற்று வீங்கிய அல்லது சிவந்த ஈறுகள்.
2. திடமான பொருட்களை மெல்லுவதில் ஒரு ஆசை.
3. எச்சில் வடித்தல்.
4. அமைதியின்மை, பரபரப்பு, எரிச்சலடைதல், அல்லது கோபம்.
5. பற்கள் முளைத்தலினால் காய்ச்சல் ஏற்றப்படாது. அதே போல பல் முளைத்தலுக்கும் வாந்தி, வயிற்றோட்டம் இருமல் தடிமன் என்பவற்றுக்கும் சம்மந்தமில்லை.

உங்கள் குழந்தையிடம் மேற்குறிப்பிட்ட அறிகுறிகளைக் காண்பிப்பதை நீங்கள் அவதானித்தால் அல்லது அதிக காய்ச்சல் ஏற்படின் உங்கள் பல் மருத்துவரிடம் காட்டி ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளவும்.

## குழந்தைகள் பற்கள் முளைக்கும் போது ஏன் எரிச்சல் உணர்வுகளை காட்டுகின்றனர்?

-ஈறினைத் துளைத்துக்கொண்டு வரும் பற்கள் அசௌகரியத்தை ஏற்படுத்தும். அந்த வலியுணர்வை உங்கள் குழந்தையால் வார்த்தைகளினால் வெளிப்படுத்த முடியாததால், பற்கள் வெளியே வரும் பொழுது அதிகளவு எரிச்சலுள்ளவர்களாக மற்றும் பரபரப்படைந்தவர்களாகக் இருப்பார்கள்.

## குழந்தையின் ஈறுகளின் வலியை ஆற்றுவதற்கு எப்படி உதவி செய்யலாம்?

-உங்கள் குழந்தை அசௌகரியமாக உணர்ந்தால், பின்வரும் எளிய குறிப்புகளை பின்பற்றலாம்.



- உங்கள் குழந்தையின் ஈறுகளை சுத்தமான ஒரு விரல் அல்லது ஒரு ஈரலிப்பான துணியை உபயோகித்து, ஈறுகளை அழுத்தித் தேய்க்கவும். குளிர்ச்சியான உணர்வும் அழுத்தமும் அசௌகரியத்தைத் குறைக்கும்.

- உங்கள் குழந்தைக்கு ஒரு டீத்திங் ரிங்கைக் [Teething Ring] கொடுக்கவும். டீத்திங் ரிங் உறுதியான றப்பரினால் உருவாக்கப்பட்டது. இது உங்கள் குழந்தையின் ஈறுகளில் அழுத்தத்தை கொடுக்க உதவி செய்யும்.

- வடியும் எச்சிலைத் துடைத்துவிடவும் தொடர்ச்சியான எச்சில் வடிதல் பற்கள் வளருவதன் ஒரு பாகமாகும். அது உங்கள் பிள்ளையின் வாயை நீரேற்றப்பட்டதாகவும், ஈறுகள் சேதமடையாது பற்கள் ஈறுகளினூடாக வெளியே வர உதவி செய்யும். ஆயினும், அளவுக்கதிகமான எச்சில் உங்கள் குழந்தையின் தோலில் எரிச்சலுண்டாகச் செய்யும். ஒரு சுத்தமான துணியினால் எச்சிலைத் துடைப்பதன் மூலம் உங்கள் குழந்தையின் கீழ்த் தாடையை உலர்ந்ததாக வைத்துக்கொள்ளவும்.

- இந்த காலப்பகுதியில் உங்கள் குழந்தையின் வலியினை கண்காணிக்கவும் குழந்தை அதிகளவு எரிச்சலடைந்து அல்லது பரபரப்பாகக் காணப்பட்டால் உங்கள் மருத்துவரிடம் ஆலோசனை கேட்கவும்.
- மருந்துக் குறிப்பில்லாத பற்கள் முளைத்தலுக்கான கிறீம்களை உபயோகிப்பதைத் தவிர்க்கவும்.

## முதலாவது பல்வரிசை எந்த வயதினில் தெரிய தொடங்கும்?

குழந்தைகளில் முதலில் தோன்றும் பற்கள் முதன்மைப் பற்கள் [primary teeth] அல்லது பால்பற்கள் [Deciduous teeth] எனப்படும். நிரந்தர பற்கள் ஐPermanent teeth] தோன்றும்வரை அவை வாயினுள்ளே காணப்படும்.
பெரும்பாலும் முதற் பல் ஏறக்குறைய 6 மாதங்களில் தோன்றும். பற்கள் முளைக்கும் காலம் ஒவ்வொரு பிள்ளைக்கும் வேறுபடும். ஆயினும், உங்கள் பிள்ளைக்குப் பல் மிக விரைவாக 3 மாதங்களில் அல்லது மிகவும் தாமதமாகப் 12 மாதங்களில் தோன்றினாலும் கவலைப்படத்தேவையில்லை.

# அரசியலமைப்பு




## அரசின் வகைகள் 01

அரசாங்கம் என்பது அரசின் முக்கிய கூறுகளில் ஒன்றாகும். அதாவது ஒரு அரசின் செயலியாக (ழுழசமைெ யபநெஉல) அரசாங்கம் காணப்படுகின்றது. அரசாங்கத்தின் தேவை மற்றும் அதன் பணிகளை பற்றி தற்காலத்தில் மக்கள் அறிந்திருப்பதோடு அவற்றின் முக்கியத்துவத்தையும் உணர்ந்திருக்கிறார்கள்.

அரசு கண்ணுக்குத் தெரியாத தன்மையுடையது. ஆனால் அரசாங்கம் அவ்வாறில்லாமல் மக்கள் தெரிந்துண கொள்ளும் வகையில் அமைந்திருக்கின்றது. இத்தகைய அரசாங்கம் பலவகைப்பட்டதாகும். தொன்றுதொட்டு இன்று வரையிலும் நடைமுறையில் இருந்து வந்திருக்கின்ற அரசாங்கம் பல மாறுதல்களை சந்தித்திருக்கிறது. அவ்வாறான அரசின் வகைகளைப் இன்றைய சட்டத்தின் சாரலினூடாக தேடுவோம்.



### முடியாட்சி (Monarchy)

முடியாட்சி என்பது, அரசின் ஒரு வடிவம் ஆகும். இதில், அதியுயர் அதிகாரம் முழுமையாகவோ அல்லது பெயரளவுக்கோ ஒரு தனிப்பட்டவரிடம் இருக்கும். இவரே அரசின் தலைவராவார்.



அத்துடன் இவர் நாட்டு மக்களிலும் வேறான தனி உரிமைகளைக் கொண்டிருப்பார்.

**இந்த அரசுத் தலைவர் மன்னர், அரசர் போன்ற பெயர்களால் அழைக்கப்படுவார்.**

முடியாட்சியில் மன்னருக்கான அதிகாரமானது தற்காலத்தில் நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது மன்னருக்கு முழுமையான அதிகாரமற்று முற்றிலும் குறியீடாக (கிரீடம் பெற்ற குடியரசு), பகுதியளவு மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட திகாரம் (அரசியலமைப்பு முடியாட்சி), முற்றிலும் சர்வாதிகாரம் (முழுமையான முடியாட்சி) என்று வேறுபடுகிறது.

**பாரம்பரியமாக மன்னர் இப்பதவியில் அவர் தனது வாழ்நாள் முழுவதும் அல்லது அதிலிருந்து விலகும் வரை வகிப்பார். அதன்பிறகு மரபுரிமையில் அடுத்த அரசர் பதவிக்கு வருவார். ஆனால் தேர்தலின் வழியாகக்கூட முடியாட்சிகளில் கூட மன்னர் தேர்ந்தெடுக்கப்பட்ட சந்தர்ப்பங்களும் உண்டு.**

### தாராண்மை மக்களாட்சி (Liberal Democracy)

தாராண்மை மக்களாட்சி என்பது மக்களாட்சி முறையின் ஒரு வடிவம் ஆகும். 21-ஆம் நூற்றாண்டில் இவ்வகை மக்களாட்சி உலகில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

தாராண்மை மக்களாட்சிக்கும், பொதுவுடமை மக்கள் குடியரசு அல்லது மக்கள் "மக்களாட்சி" போன்ற அரசாட்சி முறை வடிவங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டது.

நேரடி மக்களாட்சி, பங்கேற்பு மக்களாட்சி போன்ற வடிவங்களில் இருந்தும் இது பெருமளவு வேறுபட்டுக் காணப்படுகின்றது. தாராண்மை மக்களாட்சி, பல்வேறு அரசியலமைப்பு வடிவங்களில் அமையக்கூடும். இது, ஐக்கிய அமெரிக்கா, இந்தியா, இல பிரான்ஸ் போன்ற நாடுகளைப்போல் ஒரு குடியரசு அமைப்பில் அமையலாம். அல்லது ஐக்கிய ராஜ்ஜியம், எசுப்பெயின் போன்ற நாடுகளில் உள்ளது போல் அரசியல்சட்ட முடியாட்சி வடிவிலும் அமையலாம். இது, ஜனாதிபதி முறை, நாடாளுமன்ற முறை அல்லது இரண்டும் கலந்த முறை போன்ற அரசு முறைகளின் கீழும் அமைய முடியும்.

## நேரடி மக்களாட்சி (Direct democracy)

நேரடி மக்களாட்சி என்பது, ஒரு வகை மக்களாட்சி முறையும், குடியியல் கோட்பாடும் ஆகும். இம்முறையில் இறைமை பங்குபற்ற விரும்பும் எல்லா மக்களையும் கொண்ட ஒரு அவையிடம் அளிக்கப்பட்டிருக்கும். இம்முறை பயன்படுத்தப்படும் விதத்தைப் பொறுத்து, இந்த அவை தீர்மானங்களை நிறைவேற்றுதல், சட்டங்களை ஆக்கல், அதிகாரிகளைத் தேர்வு செய்தல் அல்லது நீக்குதல், விசாரணை நடத்துதல் போன்ற செயல்பாடுகளில் ஈடுபடலாம்.

நேரடி மக்களாட்சி, பிரதிநிதித்துவ மக்களாட்சியில் இருந்து வேறுபட்டது. சார்பாண்மை மக்களாட்சியில் இறையாண்மை, மக்களால் தேர்தல் மூலம் சார்பாளர்களாகத் தெரிவு செய்யப்படும் ஒரு குழுவினரைக் கொண்ட அவையிடம் இருக்கும்.




## பொதுநலவாயம் (Commonwealth)

காமன்வெல்த் ஓர் பொதுவான நல்நோக்கம் கொண்டு நிறுவப்படும் அரசியல் சமூகத்திற்கான வழமையான ஆங்கிலச் சொல்லாகும். இதனை பொதுநலவாயம் எனத் தமிழில் குறிப்பிடுகின்றோம். பல்லாண்டுகளாக இது குடியரசியலுக்கு இணையாக எடுத்தாளப்படுகின்றது.

ஆங்கிலேய பெயர்ச்சொல்லான "காமன்வெல்த" 15-ஆம் நூற்றாண்டில் இருந்தே பொதுநலம், "பொது நன்மை அல்லது பொது ஆகுபயன்" என்ற பொருளிலே விளங்கி வந்துள்ளது.

இது லத்தீனச் சொல்லான ரெஸ் பப்ளிகா என்பதன் மொழிபெயர்ப்பாக வந்துள்ளது. 17-ஆவது நூற்றாண்டில் "காமன்வெல்த" துவக்கத்திலிருந்த "பொதுநலம்" அல்லது "பொதுச் செல்வம்" என்ற பொருளிலிருந்து "பொது மக்களிடம் அரசாண்மை வழங்கப்பட்ட நாடு குடியரசு அல்லது மக்களாட்சி நாடு" என்பதைக் குறிக்குமாறு விரிவானது.ழு

**இந்த பத்தி தினமணியில் வெளிவந்த அரசின் வகைகள் கட்டுரையினை தழுவி இலங்கைக்கு ஏற்ற வகையில் எழுதப்பட்டுள்ளது.**

சாரல் தூறும்..............................!!!!!

அ.திருமருகன்
மாணவன்
இலங்கை சட்டக்கல்லூரி

# தெய்வத்திருமகள்

**தங்கம்மா அப்பாகுட்டி அம்மா**

செஞ்சொற்செம்மணியே சிவத்தமிழ்ச்செல்வியே
தஞ்சமன்றளித்த தனி அறத்தின்
தாயே தயாநிதியே
பஞ்சமில்லா பக்தி விஞ்சும்
துர்க்கையவள் துரந்தரியே
நெஞ்சில் உமை
போற்றுகிறோம்
விண்ணதனில்
மின்னுகின்ற
தெய்வத்திருமகளாய்
துதிக்கின்றோம்.






### ஏன் இந்த ஆய்வு?

பல வழிகளிலும் சிரமங்களை ஏற்படுத்திய இந்த 2020 இன் இறுதிக்கட்ட தாக்குதல் என்று சொல்லுமளவிற்கு மழை வெள்ள பாதிப்புக்கள் மக்களுக்கு இடையூறுகளை கொடுத்தன. யாழ் நகரத்தின் ஸ்டான்லி வீதி, யாழ் பேருந்து நிலையம், போதனா வைத்தியசாலை , அரியாலை மற்றும் நல்லூரை அண்டிய பகுதிகளில் வெள்ளம் நிரம்பியிருந்தது. கன மழை ஒன்று மிக விரைவாகப் பெய்கின்ற போது வெள்ளம் வருவது சாதாரணமானது தான். ஆனால் அந்த வெள்ளம் தேங்குவதுதான் அசாதாரணமானது.

> கன மழை ஒன்று மிக விரைவாகப் பெய்கின்ற போது வெள்ளம் வருவது சாதாரணமானது தான். ஆனால் அந்த வெள்ளம் தேங்குவது தான் அசாதாரணமானது.

வெள்ளத்திற்கான காரணங்களை எழுந்தமானமாக முன்வைத்து பொது வெளியில் காரசாரமான வாதப்பிரதிவாதங்களோடு குற்றச்சாட்டுக்கள் நடந்த போதுதான் இதற்கான உண்மையான காரணங்களை தேடிக்கண்டறிவது முக்கியமானதாக பட்டது. இந்த வெள்ளத்தின் பின்னணியைப்பற்றிய பூரண புரிதல் இல்லாத தீர்வுத்திட்டங்கள் இன்னொரு வகையான வெள்ளத்துக்கே வழியமைக்கும். எனவே எவரையும் குற்றம் சுமத்துவதல்ல இந்த கட்டுரையின் நோக்கம். இந்த அனர்த்தத்தில் சகலருக்குமே பங்குள்ளதென்பதை உணர்ந்து, விட்ட தவறுகளை இனி விட்டுவிடப்கூடாதென்பதை வலியிறுத்துவதோடு, என்ன செய்ய வேண்டுமென்பதற்கான முன்மொழிவை முன்வைப்பதுமே இக்கட்டுரையின் நோக்கம்.

### மண்ணும் மழையும்

மண்ணின் தன்மையை பொறுத்து தன் மீது விழுகின்ற மழைநீரை மண் தன்னூடாக கடத்தி **(penetration)** நிலத்தடி நீரோடு சேர்த்துவிடும். உதாரணமாக களிமண்ணில் மிக மெதுவாக இச்செயற்பாடு நடைபெறும். இதனாலேயே குளங்களின் அடிபாபாகத்தை களித்தன்மையோடு வைத்திருப்பார்கள். மணல் மண் இதற்கு நேர்மாறு. மிக விரைவாக நீரை ஊடு கடத்தி விடும். இதனூடாக படிப்படியாக மழைநீரானது நிலத்தடி நீரோடு சேர்வதால் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்து வரும். கிணற்றில் இந்த செயன்முறையை விளக்கமாக அவதானிக்கலாம். மண்ணானது நீரால் நிரம்பலடையும் வரை இந்த செயற்பாடு நடக்கும்.

காலநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களால் ஒரு மாதத்தில் கிடைக்க வேண்டிய மழை வீழ்ச்சியானது சமகாலங்களில் ஓரிரு நாட்களிலேயே கிடைக்கும் தன்மை அதிகரிக்கின்றது. இதனை விரும்பத்தகாத மழைவீழ்ச்சி என்றுதான் சொல்ல வேண்டும். இதனால் அழிவுகள் தான் அதிகம் ஏற்படும். ஓரிரு மணித்தியாலங்களில் மிகப்பெரிய மழை நீர் கிடைக்கின்ற போது மண்ணானது


ஸ்டான்லி வீதி
05.12.2020

உடனடியாக அதனை தரைக்குள் அனுப்ப முடியாது. மேற்சொன்னவாறு மண்ணின் கடத்துதிறனுக்கு ஏற்பவே நீர் கடத்தப்படும். இதனால் பெருமளவு மழை நீர் தற்காலிகமாக தேங்கி நிற்பது தவிர்க்க இயலாதது.

### யாழ்நகரப்பகுதியில் ஏன் வெள்ளம்?

அதிலும் யாழ் நகர்ப்பகுதிகளில் மண் மற்றும் மழைநீர் சந்திக்கின்ற தொடுபரப்பு மிகக்குறைவானது. காப்பெற் வீதிகளாலும், கட்டடங்களாலும், கொங்கிறீட் நடைபாதைகளாலும் பெருமளவான மண் தரை மூடப்பட்டுள்ளது. நகர்ப்பகுதியில் இவற்றை தவிர்க்கவும் இயலாது. எனவே தான் கால்வாய்கள் மூலமாக மழை நீர் வடிந்தோடச் செய்யப்படுகிறது. யாழ் நகர்ப்பகுதிகளில் வெள்ளம் தேங்கியதில் மழை நீர் வடிந்தோட முடியாமல் போனமையே பிரதான காரணமாக இருக்கிறது. இதை ஆதாரத்தோடு நிரூபிக்க முடியும்.

### ஆதாரம்

04.12.2020 அன்று பெய்த தொடர்ச்சியான பெரு மழையால் யாழ் நகரத்தில் வெள்ளம் உருவானமை தவிர்க்க முடியாதது. ஆனால் அந்த வெள்ளம் மறுநாள் காலையும் பெருமளவில் குறையாமல் தேங்கியே நின்றது. பின்னர் மதியமளவில் பெருமளவில் குறைந்துவிட்டது. அதே போன்றதொரு கனமழை 06.12.2020 ஞாயிற்றுக்கிழமை இரவும் கொட்டித்தீர்த்தது. அன்று போலவே மழை பொழிந்துகொண்டிருந்த போது ஓரளவு வெள்ளம் ஏற்பட்டது. ஆனால் மறுநாள் அதிகாலையிலேயே அவ்வெள்ளம் யாவும் வடிந்தோடியிருந்தது. கிட்டத்தட்ட ஒரேயளவு மழைவீழ்ச்சி பதிவான இரு இரவுகள். ஆனால் மறுநாளில் வேறுபட்ட அவதானங்களை தந்தது எவ்வாறு?

04.12.2020 பெய்த மழைநீரானது தேங்கி நிற்பது அவதானிக்கப்பட்டு மறுநாள் சனிக்கிழமை யாழ்நகரிலிருந்து வெள்ளம் வழிந்தோடும் வடிகாலமைப்புப்பாதைகள் ஓரளவு சுத்தமாக்கப்பட்டன. இதனால் யாழ் நகர வீதிகளிலிருந்து வெள்ளம் படிப்படியாக வழிந்தோடியது. ஆனால் அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை காலையில் அவதானித்த போதும் பெருமளவு வெள்ள நீர் வடிகால்களில் தேங்கியிருந்தது. இந்த நீர் வடிந்தோடுவதற்கு வடிகால்களில் காணப்பட்ட குப்பைகளும் ஒரு காரணம்(படங்கள்). ஏனெனில் வெள்ள நீரும் நின்றமையால் ஓரளவுதான் வடிகால்கள் சுத்தமாக்கப்பட்டிருந்தன.

### குப்பைகளுக்கும் குறைவில்லை

குப்பைகளை தெருவுக்கு(குப்பைத்தொட்டி அல்லாத) கொண்டுவருவதில் நேரடியாகவோ மறைமுகமாகவோ நாம் எல்லோருமே பங்குதாரர்கள் என்பதை நானுட்பட அனைவருமே ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். சுத்திகரிப்பு பணியாளர்களை மட்டும் குறை கூற முடியாது. ஆனால் அவர்களது செயற்பாடும் போதுமானதாக இல்லை. திறந்த நிலையிலுள்ள கால்வாய்கள் கூட உரிய முறையில் சுத்திகரிக்கப்படவில்லை என்பதை இந்த வெள்ளம் உரிய முறையில் காட்டியது. யாழ்ப்பாணத்தில் பெருமளவு கால்வாய்களின் மேற்பகுதி கொங்கிறீட் தட்டுகளால் **(cover slab)** மூடப்பட்டுள்ளன. இவற்றின் சுத்திகரிப்பு நடவடிக்கைகளும் மிகச்சவாலான விடயமாகும். எனவே அவை சுத்திகரிப்பு தேவைக்காக இலகுவாக திறந்து மூடக்கூடியவாறு அமைக்கப்பட வேண்டும்.



வைத்தியசாலை வீதி
20.12.2020

அதே நேரம் துப்பரவுப்பணியாளர்களுக்கு சேகரிக்கின்ற குப்பைகளுக்கேற்ப ஊதியம் வழங்கும் பொறிமுறை உருவாக்கப்பட்டால் அவர்களிடமிருந்து உச்ச பயனை பெறலாம். சில கால்வாய்கள் பாதுகாப்பு காரணங்களுக்காக யுத்த காலத்தில் அடைக்கப்பட்டன. இன்றுவரை திறக்கப்படாமல் உள்ள அவ்வாறான கால்வாய்களும் திறக்கப்பட வேண்டும்.

### சுத்தப்படுத்தும் மழை

20.12.2020 இல் கால்வாய்கள் சுத்தமாக்கப்பட்டமை பல விடயங்களை எமது சமூகத்திற்கு ஆணி அடித்தால் போல சொல்லியது. அதில் முன்னின்று செயற்பட்ட அனைவருக்கும் மனமார்ந்த வாழ்த்துக்களும் நன்றிகளும். கழிவு முகாமைத்துவத்தில் நாம் எவ்வளவு பின்தங்கி நிற்கின்றோம் என்பதையும் கழிவு முகாமைத்துவம் எவ்வளவு முக்கியம் என்பதையும் நாம் இனிமேலாவது உணர்ந்து செயற்பட வேண்டும். நல்ல மழை பெய்த பின்னர் வீதியை அவதானித்து பாருங்கள். அழகாக இருக்கும். சலவைத்தூள் போட்டு கழுவி விட்டது போல சுத்தமாக இருக்கும். ஆனால் இரண்டே நாட்களில் பழைய நிலையில் வீதிகள் மாசாகி இருக்கும். மழை கால்வாய்களை மட்டுமல்ல வீதிகளையும் சுத்தம் செய்கிறது. நாம் தான் எல்லாவற்றையும் மாசாக்கி விட்டு மழையையும் பேசிக்கொண்டிருக்கிறோம்.




ஸ்டான்லி வீதி
04.12.2020

வீடெல்லாம் குளங்கள் ஆனது எப்படி? கட்டுமானத்தில் நடந்த தவறுகள் என்ன? யாழ் நகரில் ஏன் நிறைய குளங்கள் காணப்பட்டன? ஒரு குளம் ஏன் அடுத்த குளத்தோடு தொடர்புபடுத்தப்பட்டது? படிகட்டு முறை வடிகாலமைப்பு என்றால் என்ன? வெள்ளம் வருமுன் எப்படி அணை கட்டுவது?

*அடுத்த இதழில் பார்ப்போம்....*

## நீங்களும் இணையலாம்!!!


எழுத்துத்துறையில் ஆர்வமுள்ளவரா?


புகைப்படங்கள் எடுப்பதில் பிரியமுள்ளவரா?


ஓவியங்கள் வரைதலில் முனைப்பானவரா?


பத்திரிகை வடிவமைப்பில் நாட்டமுள்ளவரா?

**thumi2016@gmail.com**

துமி மின்னிதழில் இணைந்து பணியாற்ற அன்புடன் அழைக்கிறோம். மேற்குறித்த மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

அதிரன்

# வெப்பமடைகிறது பூமி

## புவிவெப்பமடைவதில் செல்வாக்குச் செலுத்தும் மானிடக் காரணிகள்

### குளோரோ புளோரோ காபண் வளிமண்டலத்தில் சேர்தல்

குளோரோ புளோரோ காபண் ஒரு பச்சைவீட்டு வாயுவாக இருப்பதுடன் அது ஓசோன் படையில் பாதிப்பை ஏற்படுத்தும் ஒரு முக்கியமான வாயுவாகும். இந்த **CFC** வாயுவானது பல்வேறு விதத்தில் வளிமண்டலத்தில் சேர்க்கப்படுகின்றது. பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தியின்போது இயந்திரங்களால் வெளியேற்றப்படுதல், வளிகுளிரூட்டல் (**Refrigerator, Air Container**)செயல்முறையின் போது வெளியேற்றப்படுதல், கணனி உதிரி பாகங்கள் சுத்தம் செயன்படுத்தும் திரவங்களிலிருந்து வெளியேற்றப்படுதல் முதலிய முறைகளில் வளிமண்டலத்தில் சேர்க்கப்படுகின்றது.



### உயிர்சுவட்டு எரிபொருட்களின் பாவனை

உயிர்சுவட்டு எரிபொருட்களான பெற்றோலியப் பொருட்கள் மற்றும் நிலக்கரி போன்றவற்றை பல்வேறு விதத்தில் பயன்படுத்தப்படுகின்றபோது புவிவெப்பமடைதல் அதிகரிக்கின்றது. தொழிற்சாலைகள், வாகனங்கள் முதலியன உயிர்சுவட்டு எரிபொருட்களைப் பயன்படுத்துகின்றன. தொழிற்சாலைகள் அமைந்துள்ள பகுதிகளில் அதிகளவில் பச்சை வீட்டு வாயுக்கள் சேர்கின்றன. மேலும் வாகனங்களில் எரிபொருளாகப் பயன்படுத்தப்படும் பெற்றோலியப் பொருட்கள் தகனமடைகின்றபோது காபனீரொட்சைட்டு போன்ற வாயுக்கள் சேர்கின்றன. கைத்தொழில் நடவடிக்கைகள், வாகனப்பாவனை முதலியவற்றால் 1.4 பில்லியன் காபனீரொட்சைட்டு வளிமண்டலத்தில் வெளிவிடப்பட்டிருக்கின்றது.

### தாவரப்போர்வை அழிக்கப்படுதல்

இயற்கைத் தாவரங்கள் ஒளித்தொகுப்பின்போது காபனீரொட்சைட்டு வாயுவை சுவாசித்து ஒட்சிசன் வாயுவை வெளிவிடுகின்றன. அத்துடன் இவை நைதரசன் வட்டத்திலும் பங்களிக்கின்றன. இதனால் காபனீரொட்சைட்டு மற்றும் மிகையான நைதரசன் போன்ற வாயுக்களின் அளவு கட்டுப்படுத்தப்படுகின்றது. ஆனால் காடழிக்கப்படுகின்றபோது இவை அதிகளவில் வளிமண்டலத்தில் சேர்வதற்கு வழி எற்படுத்தப்படுகின்றது. காடுகள், புற்றரைகள் என்பன பயிர்ச்செய்கை முதலிய காரணங்களுககாக வெட்டி எரிக்கப்படுகின்றன. இவை வளிமண்டலத்தில் பச்சை வீட்டு வாயுக்களை சேர்க்கின்றன.

# புவி வெப்பமடைவதால் ஏற்படும் விளைவுகள்

### மந்தை மேய்த்தல்
அசைபோடும் விலங்குகளை மேய்க்கின்றபோதும் அவற்றிலிருந்து வெளியேறும் மெதேன் போன்ற வாயுக்கள் வெப்பநிலை அதிகரிப்பதில் செல்வாக்குச் செலுத்துகின்றன. குறிப்பாக மாடுகள், எருமைகள், குதிரைகள், கழுதைகள், கோழி, பன்றி, தாரா முதலியன தமது வாய்மூலமும் எருமூலமும் மெதேன் வாயுவை வெளியேற்றுகின்றன. மெதேன் வாயு பச்சைவீட்டு வாயு ஆகையால் அதிகளவில் வளிமண்டலத்தில் சேர்ந்து வெப்பநிலை அதிகரிப்பதற்கு வழிசமைக்கின்றது.


### நெல்லுற்பத்தி
சதுப்புத் தன்மையுள்ள நெற்காணிகளை நீர்நிரப்பி பயன்படுத்துகின்றபோது அந்நிலத்திலிருந்து வளிமண்டலத்திற்கு மெதேன் வாயு வெளிவிடப்படுகின்றது. இதனால் புவிவெப்பமடைதல் அதிகரிக்கின்றது.

### விவசாயக்கழிவுகளை எரித்தல்
விவசாயக் கழிவுகளை அதிகளவில் எரிப்பதனாலும் $CO_2$, $CH_4$, $N_2O$, NO போன்ற வாயுக்கள் சேர்கின்றன. இவை யாவும் பச்சைவீட்டு வாயுக்களாகையால் வெப்பநிலை அதிகரிப்பதற்கு வழிஏற்படுத்துகின்றன.

### திண்மக்கழிவுகள்
அதிகரிக்கின்ற கழிவுகளை கொட்டுதல், நிலம்நிரப்புதல், போன்ற செயன்முறைகளினூடாகவும் வளிமண்டலததிற்கு மெதேன் வாயு கிடைப்பதற்கு ஏதுவாகின்றது.

### வெப்பநிலை உயர்வடைதல்
புவிவெப்பமடைதல் மூலம் ஏற்படுகின்ற முக்கியமான பாதிப்பு புவியின் வளிமண்டல வெப்பநிலை உயர்ச்சியடைதல் ஆகும். கடந்த 2000 – 2012 ஆம் ஆண்டு வரையிலான 12 வருட காலப்பகுதியினுள் 0.8°C வெப்பநிலை அதிகரித்துள்ளதுடன், எதிர்வரும் 2100 ஆம் ஆண்டளவில் 6.4 °C வெப்பநிலை அதிகரிப்பு இடம்பெறும் எனவும் கூறப்பட்டிருக்கின்றது. பச்சைவீட்டு வாயுக்கள் அதிகளவில் வெப்பத்தை உறிஞ்சிக்கொள்வதனால் இந்த நிலைமை ஏற்படுகின்றது.

### பனி உருகுதல்
புவிவெப்படைதலினால் பனிக்கட்டிக் கவிப்புகள் உருகும் நிலை ஏற்படும். உறைநிலை அல்லது அதற்குக் கீழே வெப்பநிலை காணப்படும்போதே பனிக்கட்டிகள் திண்ம நிலையில் இருக்கும். வெப்பநிலை அதிகரிக்கின்றபோது பனிக்கட்டிகள் திண்மநிலையிலிருந்து திரவநிலைக்கு மாறும். இந்த நிலைமை வெப்பநிலை அதிகரிப்பதனால் ஏற்படும். எதிர்வரும் 2040 ஆண்டளவில் அந்தாட்டிக் பகுதிகள் பனியற்ற கோடைகாலத்தை



உணரும் என எதிர்வுகூறப்படுகின்றது. அமெரிக்காவிலுள்ள பனிக்கட்டி தேசிய பூங்காவில் 1910 இல் காணப்பட்ட பனிக்கட்டிக்கவிப்பில் 20 சதவீதமான பனிக்கட்டிக் கவிப்புகளே 2012 ஆம் ஆண்டில் காணப்படுவதாகக் குறிப்பிடப்படுகின்றது. இதேவேளை 2004 ஆம் ஆண்டில் இமயமலையின் மேல்படிந்துள்ள பனிக்கட்டியானது வருடாந்தம் 4 அங்குலம் தடிப்பினால் குறைந்துவருவதாகக் குறிப்பிடப்படுகின்றது.

## கடல்மட்டம் உயர்வடைதல்

கடல் மட்ட வெப்பநிலையானது பல தசாப்தங்களாக சராசரி 1°C இற்கு மேல் அதிகரித்துள்ளது. இக்கடல் மட்ட வெப்பநிலை உயர்வு எல்நினோ நிகழ்வுகளின் போது 3°C ஆக அதிகரிக்கின்றது. இதனால் முனைவுப் பனிப்படலம் குறிப்பாக ஆட்டிக் பனிப்படலம், 2.3 மீற்றர் வரை உருகி கடந்த நூற்றாண்டில் கடல்மட்டத்தை 1.3 மில்லிமிற்றரினால் உயரச் செய்துள்ளது. இது ஆட்டிக் பகுதியில் படர்ந்திருக்கும் மொத்தப் பனியில் 40 சதவீதமாகும். கடல்மட்ட உயர்வு காரணமாக இன்று கரையோர ஈரநிலங்கள் பல கடலுள் மூழ்கிவருகின்றன. தொடர்ச்சியான இந்நிகழ்வுகளினால் உலகின் மொத்த ஈரநிலங்களில் 20 சதவீதம் 2080 ஆம் ஆண்டளவில் மூழ்கிவிடும் அபாயம் உள்ளதாக எதிர்வு கூறப்படுகின்றது. 2100 ஆம் ஆண்டின் இறுதியில் 23 அங்குலம் கடல்மட்டம் அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதனால் மாலைதீவுகள், பசுபிக் தீவான ரிகுவா என்பன கடலுள் மூழ்கிவிடும் எனக் கூறப்படுகின்றது.




## உயிர்பல்லினத்தன்மை குறைவடைதல்

காலநிலை மாற்றமும் பூகோள வெப்பமயமாதலும் உயிரின பல்வகைமை இழப்பில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. வெப்பநிலை தொடர்ச்சியாக அதிகரிக்கின்றபோது அதன் தீவிரத்தை தாங்கமுடியாத விலங்கினங்கள் உயரிழக்கின்றன. குறிப்பாக டைனோசர் முதலிய உயிரினங்கள் வெப்பநிலை அதிகரிப்பால் அழிவடைந்தன என்று கூறப்படுகின்றது. இதேவேளை சர்வதேச சமுத்திர வளிமண்டலவியல் அமைப்பின் அந்தாட்டிக் பகுதியில் நடாத்திய சூழல்தொகுதி பற்றிய ஆய்விலே 50 சதவீதமான பென்குயின் பறவைகள் புவிவெப்பமடைதலினால் உயிரிழந்துள்ளதாகக் குறிப்பிடுகின்றது.

## தொற்றுநோய்கள் பரவுதல்

வெப்பநிலை அதிகரிப்பு மற்றும் வரண்ட பிரதேசங்களில் ஏற்படுகின்ற வெள்ளப்பெருக்குகளால் தொற்றுநொய்கள் அதிகளவில் ஏற்படுகின்றன. வெப்பநிலை அதிகரிக்கப்படுகின்றபோது ஒட்டுண்ணிகள், வைரஸ், பக்டீரியாக்கள் அதிகளவில் விருத்தியடைவதற்கு வழிசமைக்கின்றது. மலேரியா, யானைக்கால் நோய்கள், லைம் நோய், ஹண்டாவைரஸ் தொற்றுக்கள், டெங்குக் காய்ச்சல், புபோனிக் பிளேக், மற்றும் காலரா ஆகிய நோய்கள் பரவும் அபாயம் அதிகரித்துள்ளது.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | | 3 | 4 |
| | | 5 | | | 6 | | |
| 7 | | | | | 8 | | |
| 9 | | | | | 10 | | |
| | | 11 | | 12 | | | |
| 13 | | | | | | | 14 |
| | | | | | | | |
| 15 | | | | | | 16 | |




அனுப்ப வேண்டிய.....

இறுதித்திகதி :- 29.01.2021
முகவரி :-
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

## இடமிருந்து வலம்

1.உலகின் பழைமையான நாகரிகங்களில் ஒன்று
3.தலைவன்
5.காயவைத்து பெறும் உப உணவு(குழம்பி)
7.உள்ளும் புறமும் இருப்பவர்(திரும்பி)
8.வாசனையான கொடிமலர்
9.வாசலில் வைத்து வரவேற்பது
11.உலகியல் இன்பங்களை கடந்த நிலை
13.பறங்கியாறு தொடங்கும் இடம்
15.அரவம்(குழம்பி)
16.குரங்கு

## மேலிருந்து கீழ்

2.,ராசிகளில் ஒன்று
4.தேவார ஏடுகள் இருந்த இடம்
6.ஒருவித்திலை தாவரம்
10.மலையில் வசிக்கும் கூட்டத்தினர்
11.படகோடு இருப்பது
12.வயல்களின் எல்லை
13.உயிரினும் பெரியது
14.தலைமை தாங்கும் பெண்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 கோ | 2 பு | 3 ர | 4 ம் | | 5 வை | 6 கா | சி |
| 7 ச | த் | தி | ர | 8 ம் | | ன | |
| 9 லை | த | | 10 உ | ற | 11 க் | க | 12 ம் |
| | 13 ர் | 14 மோ | | 15 அ | ம | ம் | ணி |
| 16 பி | | 17 தி | 18 ரி | | ள் | | க |
| 19 ம் | 20 வ | ர | தி | | 21 க | 22 வு | த |
| 23 த | ர | ம் | ந் | 24 தி | | இ | |
| | ம் | | 25 ம | தி | ந் | ர | ம் |


## குறுக்கெழுத்துப்போட்டி - 13

### பரிசுக்குரியவர்

தி. குருபரதர்சினி
தரம் 10
யாழ் இந்து மகளீர் கல்லூரி

இயற்கை முற்கூட்டியதாகவே தனது முன்னெச்சரிக்கையை காட்டி வருகின்றது. இதற்கு எடுத்துக்காட்டாகவே யாழ் தீவகத்தின் பல பகுதிகள் மற்றும் கல்லுண்டாவெளி போன்ற பல பகுதிகளில என்றும் இல்லாதவாறு கடல் தரைக்குள் உள்நுழைந்தது. ஏற்கனவே வரும்காலத்தில் நீரில் மூழ்கிப்போவதற்கான ஏதுகையை அதிகளவில் கொண்டதாக எமது பகுதிகளே காணப்படுவதால், அனர்த்த முகாமைத்துவ திட்டங்களை சீராக வகுத்து, கடல்நீர் மேல்மட்டம் உயர்வடைதல் தொடர்பான கரிசனையில் ஈடுபடவேண்டும். யாழ்பகுதிகளில் பிரதானமாக நகரை அண்டிய பகுதிகளில் கடல்நீரினுள் பெருமளவான கழிவுகள் கொட்டப்படுதல் பெரும் சவாலான விடயமாக காணப்படுகின்றது. இச்செயற்பாடு பல்வேறு தொடர் துறைகளை நேரடியாக பாதிக்கின்றது. யாழ்நகரின் சுற்றுலாப்பயணிகளை ஈர்க்கும் இடமான யாழ்ப்பாண கோட்டை, பண்ணை கடற்கரைப்பகுதிகளில் இவ்வாறான தோற்றப்பாடுகளை காணமுடிகின்றது. பல்வேறு தன்னார்வ அமைப்புகள் சுத்தப்படுத்தல் செயற்திட்டங்களை பல சிரமங்களுக்கு மத்தியில் முன்னெடுத்து செல்கின்ற போதிலும், தொடர்ச்சியாக அப்பகுதிகளில் கழிவுகள் கொட்டப்படுகின்றன. எனவே இப்பகுதிகளில், கண்காணிப்பு கமராக்களை இடுவதன் மூலமோ அல்லது பாதுகாப்பு உத்தியோகத்தர்களை பணியில் அமர்த்துவதன் மூலமோ தீர்வொன்றினை பெறலாம்.

தற்போது நடைமுறையில் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து ஆய்வுகளுமே காலநிலைமாற்றத்தின் அடிப்படை காரண காரணியாக மனிதனே இருப்பதாக குறிப்பிடுகின்றன. மனித சமுதாயம் அதை நன்குணர்ந்து சூழலியல்சார்ந்த






நிலைபேறான இருப்புக்காக செயற்பட வேண்டியது காலக்கட்டாயமாகும். காலநிலை மாற்றத்திற்கு பெரிதும் துணைபோகின்ற $CO_2$ வாயு எம்பகுதிகளில் இருவழிகளுடாகவே சூழலுக்கு தாக்கம் செலுத்துகின்றது. நாம் முன்னரே கலந்துரையாடிய எரிபொருள் பாவனை



மற்றையது காடுகளினதும் மரங்களினதும் எரிப்பு. சமீப காலங்களில் சிறப்பாக வன்னி நிலப்பரப்பில் பாரிய காடுகள் அனுமதியின்றி அழிக்கப்படுவதுடன் அவை கட்டுமானத்தேவைகளுக்காகவும், அபிவிருத்தி போர்வையின் கீழும் மேற்கொள்ளப்படுகின்றது. காடுகள் பல்வேறு வகையில் சூழல் சமநிலையில் செல்வாக்கு செலுத்துகின்றது. மிகப்பெரிய சூழல் சேமிப்பு தளமாகவும் காடுகள் காணப்படுகின்றன. சூழலின் பாரிய காபனை தன்னகத்தே கைக்கொண்டுள்ள காடுகள் அழிக்கப்பட்டு, மீண்டும் எரிக்கப்படுகின்ற போது மீண்டும் போது மீண்டும் அவை $CO_2$ ஆக சூழலுக்கு விடுவிக்கப்படுகின்றது. உலக விஞ்ஞானிகளின் தரவுகளின் படி ஒவ்வொரு

வருடமும் 2 தொடக்கம் 5 பில்லியன் தொன், அளவான $CO_2$ வருடாந்தம் மரங்களின் அழிப்பினால் வெளிவிடப்படுகின்றது. 1860 ஆண்டளவில் இருந்த $CO_2$ இனுடைய அளவானது இன்றைய திகதியளவில் 25% ஆக அதிகரித்து இருப்பதாக கூறப்படுகின்றது.



ஆய்வறிக்கைகளின் படி காலநிலை மாற்றமானது பின்வரும் நான்கு முறைகளில் பிரதானமாக தாக்கம் செலுத்துகின்றது.

1.ஆபத்தான அதிகரித்த வெப்பஅலைகள் .
2.அளவுக்கதிகமான மழை மற்றும் பனி.
3.வரட்சி.
4.மண்டல சூறாவளிகள்.

அண்மையில் நவாலிப்பகுதியில் இரண்டு மினிசூறாவளிகள் தாக்கிச்சென்றிருக்கின்றன. இத்தோற்றப்பாட்டுக்கு அப்பகுதியை சேர்ந்த மக்களின் உடனடி செயல்விளைவு காரணமாக இருக்காது. நிச்சயமாக இதற்குரிய அடிப்படை காரணங்கள் நிச்சயமாக, மனிதன் எனும் அங்கி இயற்கையோடு வளர்த்து வைத்துள்ள பகையே காரணம் எனலாம். வெப்பம் அதிகரிக்கின்ற போது வளி விரிவடைதல் சாதாரணதோற்றப்பாடாக இருப்பினும், மிதமிஞ்சிய வெப்ப அதிகரிப்பானது பல்வேறு விதங்களில் எம்மை பாதிக்கும். உலக உயிர்க்குடித்தொகையில் 30% அதிகமான உயிரினங்கள் காலநிலை மாற்றத்தினால் ஏற்படுகின்ற தத்தமது சூழலியல் மாற்றங்களின் சடுதியான நிலையின்மையால் அழிவடையும்,அபாயத்தில் உள்ளன. எமது, ஈழமானது மிகப்பெரிய உயிர்ச்சூழல்தொகுதியினுடைய தரிப்பிடமாகும். ஆனால் காலநிலை மாற்றம் காரணமாக பாரிய அபாயத்துள் எமது சூழல்தொகுதி சிக்குண்டுள்ளமை மறுக்கமுடியா உண்மையாகும். பல வல்லாதிக்க நாடுகள் அதிலும் குறிப்பாக அமெரிக்காவானது காலநிலை மாற்றம், என்ற, ஒன்றே இல்லை என்றவாறாக தமது நிலைப்பாட்டை கடந்த வருடம் தெரிவித்தது. ஆய்வறிக்கைகளின்படி வடக்கு மாகாணத்தில் கடந்த 118 வருடங்களில் சராசரி வெப்பநிலையானது 0.84 பாகை செல்சியஸ் இனால் அதிகரித்துள்ளது. மழைவீழ்ச்சியின் அளவை கடந்த 118 வருடங்களில் எடுத்துக்கொண்டால் 8mm என்ற சொற்ப அளவே அதிகரித்துள்ளது. இது ஒரு கணிசமான அளவியல் அதிகரிப்பு இல்லை, எனினும் மழைநாட்களின் அளவில் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஆரம்பகாலங்களில் வடமாகாணத்தின் வருடாந்த மழைவீழ்ச்சி 84 மழநாட்களாக காணப்பட்டது. 1970ம் ஆண்டளவில் வருடாந்த மழைவீழ்ச்சியானது 72 மழைநாட்களாக காணப்பட்டது. தற்போது வருடமொன்றின் மழைநாட்களின் அளவானது 54 நாட்களாக காணப்படுகின்றது. அதாவது மழைநாட்களின் அளவில் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஆனால் மழைவீழ்ச்சியினுடைய அளவானது அதேயளவாக காணப்படுகின்றது. இதன்மூலமாக ஒரு வரையறுக்கப்பட்ட குறுகிய காலப்பகுதியில் பெரியளவான மழைவீழ்ச்சி கிடைக்கப்பெறுவதால் அவற்றை சேமிப்பதற்கும், பரிபாலனம் செய்வதற்கும், ஏற்ற கட்டமைப்புகள் இன்மையினால பாரியளவான அனர்த்த வாய்ப்புகள் ஏற்படுகின்றன. அத்தோடு பெருமளவான நீர் மண்ணின் சேமிப்பு தளங்களை





சென்றடையாமல் கடலை சென்றடைகின்றன. இவ்வாறாக எமது பகுதிகளில் நீர் சேமிப்பு சவாலுக்குரிய ஒன்றாக காணப்படுகின்றது. மழை கிடைக்காத காலப்பகுதிகளான சித்திரை கடை முதல் ஆவணி வரையான காலப்பகுதியில் பாரிய நீர்த்தட்டுப்பாடு ஏற்படுகின்றது. எமது பிரதேசமும் மக்களும் புயலுக்கொன்றும் புதியவர்கள் அல்ல. ஆனால் 2008ம் ஆண்டு ஏற்பட்ட நிசாப்புயலுடாக நாம் பெற்ற மழைவீழ்ச்சியினுடைய அளவானது இவ்வருடம் ஏற்பட்ட நிவர், புரேவியினுடைய அளவைவிட அதிகமாகும், எனினும் நிசாப்புயலின் போது ஏற்பட்ட காற்றுத்தாக்கமே அதிகமாக காணப்பட்டது. ஆனால் நாம் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் போன்ற ஒரு வெள்ளனர்த்தத்தை 2008ம் ஆண்டில் சந்திக்கவில்லை. காரணம் நாம் இன்றைய அளவுக்கு இயற்கையோடு அன்று பகை வளர்க்கவில்லை என்பதே யதார்த்தம். அன்று இலகுவாக நீர் புகவிடும், வழிந்தோடவும் வழி இருந்தமையே காரணமாகும். ஆகவே மழைவீழ்ச்சி தேவைக்கு அதிகமாக கிடைக்கின்ற போதும் நீரை சேமிக்கின்ற தன்மை குறைவடைந்துள்ள துர்பாக்கிய சூழ்நிலைக்கு ஆளாகியுள்ளதோடு, காலப்பயிர்செயகை மட்டும் நம்பியிருக்கின்ற தீவகம் போன்ற பதிகளில் வாழ்கின்ற விவசாயகளும் பாரிய பின்னடைவை சந்திக்கின்றனர். அத்தோடு வரட்சிதன்மையும் இழையோட ஆரம்பித்துவிட்டது. 1லீற்றர் பாலினுடைய விலைக்கு அண்ணளவாக, 1லீற்றர் நீரன் விலை விற்கப்படுகின்றது. ஏற்கனவே குறிப்பிட்டவாறான தீர்வத்திட்டங்கள் ஊடாகவும் வேறு ஆக்கபூர்வமான திட்டங்கள், ஊடாகவும் இக்காலநிலை மாற்றம் எனும் பாரிய சவாலை வென்றெடுத்தல் வேண்டும். அத்தோடு 100% வினைத்திறனான தீர்வு முன்மொழிவுகள் வெற்றிகரமாக அமையாத போதும் நாம் நிலத்தை பரீட்சையப்படுத்தல் இன்றியமையாத ஒன்றாகும். அதாவது ஒவ்வொருத்தரும் தனிப்பட்ட ரீதியாகவும் அல்லது சமூகமாக நிலத்தினை பரீட்சையப்படுத்தி குறைந்தளவான நாட்களில் அதிகளவிலான நீரை சேமிப்பதற்கு ஏற்றவாறாக தயார்படுத்த வேண்டும். அத்தோடு அனர்த்தங்களுகககு தீர்வாக வருடாவருடம் நிவாரணங்களையும், வாழ்வாதாரங்களையும் வழங்குவதோடு நின்றுவிடாமல், சரியான நிலைபேறான தீர்வுதிட்டத்தினை முன்வைத்து மக்களோடு துறைசார் நிபுணர்களையும் உள்வாங்கி செயற்படுத்தல் வேண்டும்.

த.விதுர்ஷன்.
மாணவன்,
கொழும்பு பல்கலைக்கழகம்.



# அட்டைப்படம் சொல்லும் கதை

**புகைப்படம் எடுக்கப்பட்ட இடம் : மட்டுவில்**

**கருப்பொருள் : கையில் வெண்ணெய் இருக்க நெய்க்கு அலைவானேன்?**



**டிலக்க்ஷன் புவிராஜ்**

பாரம்பரியம் என்பதற்கு சரியான அர்த்தம் என்னவென்று பார்த்தால் நமது நம்பிக்கைகளையும் நல்ல பழக்க வழக்கங்களையும் வழிவழியாய் வாங்கி வழங்குவது என்று பொருள்கொள்ளலாம்.

எவை நமது நம்பிக்கைகள்? எவை நமது பழக்க வழக்கங்கள், இந்த கேள்விகளுக்கெல்லாம் ஓரிரு வார்த்தைகளில் யாராலும் பதிலளிக்க முடியாது. ஏனெனில், இதற்கான பதில் வார்த்தைகளைத் தாண்டி நமது வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்துள்ளது.

உலகம் பல தொழில்களைச் செய்து சுழன்றாலும், ஏர்த் தொழிலின் பின்தான் அத்தனையும் நிற்கின்றன. அதனால், எவ்வளவு துன்புற்றாலும் உழவுத் தொழிலே சிறந்தது என்பதை வலியுறுத்த பொய்யாமொழிப் பெருந்தகை ஓர் அதிகாரத்தையே உருவாக்கியுள்ளார்.

ஏன் விவசாயத்திற்கு மட்டும் அப்படியொரு முக்கியத்துவம்? ஏன் உழவுக்கு மட்டும் அப்படியொரு உன்னத இடம்? காரணம், மனிதனின் ஆதி தொழில் மற்றும் ஆதார சுருதி அதுதான். இயற்கையோடு இயைந்து ஏற்படுத்திக்கொண்ட ஓர் நம்பகம்தான் உழவு. அந்த பந்தம்தான் அவனை காலாகாலத்திற்கும் பசியாற்றி வந்ததோடு மட்டுமின்றி ஆரோக்கியமாகவும் வைத்திருந்தது. உண்மையில் சொல்லப்போனால், உழவு அவனுக்குத் தொழில் அல்ல வாழ்க்கைமுறை. முக்கியமாக அவனது அன்றைய விவசாயத் தொழில் தற்சார்பு நிலையில் இருந்தது. எதற்காகவும் உழவன் பிறரிடம் கையேந்தாமல் கௌரவமாக வாழ்ந்தான். விதை - அவனிடம் இருந்தது. எரு - அவனது மாடு கொடுத்தது. நீர் - மழை பொய்க்கவில்லை. ஆட்கள் - அவனது குடும்பமே அவனுக்கு உதவியது. ஆனால் இன்று? விதைக்கும், உரத்திற்கும், நீருக்கும், ஆளுக்கும் அவன் வெளியே கையேந்தும் நிலையே உள்ளது. இதற்கெல்லாம் முக்கியக் காரணம் நாம் நமது பாரம்பரியத்தை மறந்ததே. விவசாயத்திற்கு நீண்டகால நோக்கில் எது நல்லது என பலரும் யோசிக்கவில்லை. எல்லாமே குறுகிய பார்வை கோணத்தில், வெறும் லாப நோக்கில், விளைச்சலை குறிவைத்து இருந்தனவே ஒழிய நீண்டகால, நிலைத்த வேளாண்மை பற்றி பலரும் சீர் தூக்கிச் சிந்திக்கவில்லை. உழவு இயந்திரங்கள் மூலம் மண்ணின் கெட்டித்தன்மையை கெடுத்தோம். அதன் விளைவைத்தான் இப்போது நாம் அறுவடை செய்து வருகிறோம். பொங்கல் பண்டிகையின்போது, மாட்டிற்கு என தனியாக பொங்கல் வைத்து நன்றி சொல்கிறவன் உலகத்திலேயே தமிழன் ஒருவன்தான். ஏனெனில், அதை பெருஞ்செல்வமாய் உணர்ந்தவன் தமிழனே. “கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு மாடல்ல மற்றை யவை” - என்றார் வள்ளுவர். மாடு என்பது இங்கு செல்வத்தையே குறிக்கிறது. அப்படியென்றால் அந்தக் காலத்தில் யாரொருவர் மாடுகளை அதிகமாக பெற்றிருந்தாரோ அவரே மிகப்பெரிய செல்வந்தர். இங்கு செல்வம் என்பதை பொருட்செல்வம் என்று மட்டும் கொள்ளலாகாது. ஆரோக்கியம், நிம்மதி, பாதுகாப்பு, என சகல சம்பத்துகளும் கொண்ட பேறு மாடுகளால் வழங்கப்பட்ட காலம் அந்தக் காலம்.

சாதாரணமாக கோயில்களில், மற்ற இல்லங்களில் உள்ள பூஜை அறைகளில் ஒரு படத்தை நீங்கள் பார்த்திருக்கலாம். கோமாதா அல்லது காமதேனு என்றழைக்கப்படும் ஒரு பசு மாட்டின் மேனி முழுவதும் சகல தெய்வங்களின் உருவங்களை வரைந்திருப்பார்கள். உண்மையில், அந்தக் காலத்து, நமது முன்னோர்கள் அறிவில் உச்சம் தொட்டவர்கள். ஏனென்றால், அவர்கள்

கடவுளர்களாக சித்தரித்த உருவங்களெல்லாம் உண்மையில் பசுவின் வயிற்றில் இருக்கும் நல்லது செய்யும் நுண்ணுயிரிர்கள்தான் என்பது தான் நாம் உணரவேண்டியது.

அவ்வளவு நன்மை செய்யும் உயிர்கள் பசு வயிற்றில் வசிக்கின்றன. எனவேதான் பசுவயிற்றில் இருந்து வரும் எதுவும் நமக்கு நன்மை பயப்பனவாகவே உள்ளன. முதலாவதாக, பால்,அது ஒரு முழுமையான உணவு. அதனால்தான் அதனை தாய்ப்பாலுக்கு அடுத்த நிலையில் நமது முன்னோர்கள் மதித்து வந்தனர். அத்தோடு அது நமக்கு வேண்டாத களை, புல், பூண்டைத் தின்று கழிவாக வெளியேற்றும் மூத்திரமும், சாணமும்கூட மிகுந்த மதிப்பு மிக்கவை. உலகத்தில் எந்த இயந்திரமாவது நமக்கு வேண்டாத கழிவை உண்டு மதிப்பு மிக்கப் பொருட்களை பரிசாகக் கொடுக்குமா!?.

□ஒரு நாட்டுப் பசுவில் இருந்து கிடைக்கும் மூத்திரத்தையும், சாணத்தையும் வைத்து 35 ஏக்கர் நிலப்பரப்புள்ள வேளாண் தோட்டத்திற்குத் தேவையான எல்லாவித இடுபொருள் மற்றும் பயிர்க்காப்பு சம்பந்தப்பட்ட பொருட்களையும் பெற முடியும் □ என்கிறார்கள் இயற்கை வேளாண்மை வல்லவர்கள். என்ன அற்புதம் பாருங்கள்!

அது தரும் சாணத்திலிருந்து வரும் நுண்ணுயிர்கள் அல்லாமல் வேறு எதுவும் இந்த மண்ணை வளப்படுத்த முடியாது என்பது தமிழர் கண்டறிந்த உண்மை. தற்காலிகமாக, வெளி இடு பொருட்களான இரசாயன உரங்கள் பயன்படலாம், ஆனால் நீண்ட நிலைத்த வேளாண்மை வேண்டுமென்றால் தொழு உரம் என்று அழைக்கப்படும் சாணம் மிகவும் முக்கியம். சாணத்தின் சந்தை மதிப்பு பல ஆயிரம் ரூபாய். நீங்கள் பொறுத்திருந்து பாருங்கள், தண்ணீருக்கும் பெட்ரோலுக்கும் சண்டை வருதுவது மாதிரி, ஒருநாள் மாட்டு சாணத்திற்கும் பெரிய சண்டை வரத்தான் போகிறது..

அந்தக் காலத்தில் (ஏன் இப்போதும் கூட) சிவன் கோயில்களில் பசுவில் இருந்து கிடைக்கும் பொருட்களைக் கொண்டு பஞ்சகவ்யம் எனப்படும் ஒரு திரவத்தைத் தீர்த்தமாகக் கொடுப்பதுண்டு. அது பயிர், கால்நடை ஏன் மனிதருக்கு ஏற்படும் பல ஆரோக்கியக் கேடுகளையும் சுகமாக்க வல்லதாகும்.

ஏன், அந்தக் காலத்தில் புதுவீடு கட்டினால் பசுமாட்டைத்தான் முதலில் உள்ளே கூட்டிச்செல்வார்கள். அதன் கோமியத்தைத்தான் வீடு முழுவதும் தெளிப்பார்கள். அதன் சாணத்தைத்தான் வாசலில் மெழுகுவர்கள். அவ்வளவு கிருமி நாசினிகளாக அவை செயல்புரிந்தன. ஆனால், அவை அனைத்தும் இன்று பழங்கதைகளாகிவிட்டன. அவற்றின் மகத்துவம் மறக்கப்பட்டுவிட்டன. அவற்றை மீட்டெடுக்கவேண்டியது நமது கடமையல்லவா? சாணத்தினை வெறும் மண்ணிற்கான இடுபொருளாக மட்டுமன்றி, எரிவாயு, விபூதி, ஊதுவத்தி, என நானாவித பயன்பாட்டிற்கும் உபயோகிக்கலாம். இன்று அவற்றிற்கான தேவை அதிகரித்தே வருகின்றன. குறிப்பாக இயற்கை விவசாயம் செய்ய விழையும் எவரும் நாட்டுப்பசுமாடு இன்றி விவசாயம் செய்யவே முடியாது. ஜிவாமிர்தம், பஞ்சகவ்யம், அக்னி அஸ்தரம், அரப்பு மோர் கரைசல் என்று, கோமியமும், சாணமும் பயன்படாத இயற்கைசார் இடுபொருள்களே இல்லை. அந்தக் காலத்து தமிழனும் கலவைப் பாசனம், வண்டி, உழுதல், என எல்லாவற்றிற்கும் மாட்டையே நம்பி இருந்தான்.

ஆனால் பாவம், இன்று மாட்டை பால் கறக்கும் ஒரு இயந்திரமாக மட்டும் பாவித்து, பல வித கஷ்டங்களை கொடுக்கிறோம். நகர்ப்புறங்களில் பால் வற்றிய மாடுகள் கடதாசிகளையும், பிளாஸ்டிக் பொருட்களையும் தின்பதைப் பார்க்கும்போது எம் நெஞ்சு பதறவேண்டும். நம்மால் முடிந்தவரை நமது செல்வங்களை மீட்டெடுப்போம். அவை அழிந்து போகாமல் முடிந்த அளவு காப்பாற்ற உதவியாக இருப்போம்.
ஏனென்றால்,

**“மாடுமனை தேடுவதும் வல்லநிலை கூடுவதும் மாடுகள் இருக்கும் வரைதான்!....”**
**மாட்டுப்பொங்கல் வாழ்த்துக்கள்!**

T.K. மகி

# வழுக்கியாறு

## சூழற்தொகுதியின் அமைப்பும் தொழிற்பாடும்

12

இயற்கையான பல்லாண்டுத் தாவரங்களான Borassus flabellifer (பனை மரம்), Tamarindus indica (புளிய மரம்), Hespesia populnea (பூவரச மரம்), Gliricidia sepium(சீமைக்கிளுவை), Commiphora caudate(கிளுவை), Azadirachta indica (வேம்பு), Melia dubia (மலை வேம்பு), Terminalia arjuna (மருத மரம்), Ficus religiosa (அரச மரம்), தேக்கமரம், கொண்றல் மரம், மஞ்சஉணா மற்றும் Ficus microcarpa (ஆலமரம்) ஆகியவை பிரதானமாக மக்களுக்கு பயன் தரும் காட்டு மரவர்க்கத்திற்கு சில உதாரணங்களாகும் அத்துடன் மக்களால் விரும்பி தமது வீட்டுத்தோட்டங்களில் Mangifera (மாமரம்), Artocarpus heterophyllus (பலா மரம்), Cocos nucifera (தென்னை மரம்), Areca catechu (கமுக மரம்), Musa (வாழை), Carica papaya (பப்பாசி) பேன்ற மரங்களும் பழங்கள் முதலிய உணவுகளை பெற்றுக்கொள்ளவும் வெட்டு மரம், விறகுத்தேவைக்கும் நிழல் மற்றும் மருத்துவத் தேவைகளுக்கும் பயன் படுகின்றன.

வீட்டுத்தோட்டங்களில் வளர்க்கப்படும் பூமரங்களும் மற்றும் பயன்தருமரங்களும் மக்களின் வாழ்வாதாரத்தில் பெரும்பங்கு வகிக்கின்றன. பனை, தென்னை மரங்களில் இருந்து கள், பதனீர் என்பன பெறப்படுவதுடன் இவை பிரத்தியேக சமூகக்குழுவினரால் வாழ்வாதாரமாக கொள்ளப்படுகின்றது. அத்துடன் வீட்டுப்பாவனைக்கான கைவினைப்பொருட்கள் மற்றும் அலங்காரப்பொருட்கள் என்பன பிரதேசமக்களால் உற்பத்திசெய்யப்பட்டு



பயன்படுத்தப்படுகின்றன. இவை பிரதேச சிறு கைத்தொழில் வாழ்வாதாரமாகவும் கொள்ளப்படுகின்றன. பொதுவாக பெரிய காட்டு மரங்களை பொது இடங்களான வீதி ஓரங்கள், கோயில் அயல்களிலும் வெறு வளவுகளிலும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இம் மரங்கள் இடங்களை அடையாளப்படுத்தப்



பயன்படுவதுடன் (உதாரணமாக அரசடி, ஆலடி, புளியடி, வேம்படி) வழிப்போக்கர்களுக்கு நிழல் தருவனவாகவும். புறவைகள் மற்றும் பல்லி, ஓணான் போன்ற சிறு விலங்குகளிற்கு இயற்கை வாழிடமாகவும் அமைகின்றன.

மக்கள் பெரிய மரங்களை வெட்டி அவற்றை தச்சு வேலை செய்பவர்களுக்கு விற்பனை செய்கின்றனர். அவர்கள் அதனை தளபாடங்களாகவும் வீட்டுப்பாவனைப் பொருட்களாகவும் உற்பத்திசெய்து அவற்றை மீண்டும் அப்பகுதி மக்களிடமே விற்பனை செய்கின்றனர். பனை மரங்களும் மற்றும் பெரு மரங்களும் கட்டட நிர்மானத்திற்காகவும் பணத்திற்காகவும் அதிகமாக வெட்டி அகற்றப்படுகின்றன. ஆனால் இதனை மீள் நிரப்பும் வகையிலான மீள் மர நடுகை மிகக்குறைவாக இருப்பதனால் இயற்கை

அழகு கெடுவதுடன் இயற்கை வளங்களின் அழிவும் அதிகமாகின்றது.



விவசாய நிலங்களில் கிணறுகள் மற்றும் நீர்த்தேக்கங்களுக்கு அருகாமையில் தென்னை, பனை, பூவரசு, மஞ்சஉணா, வாழை முதலான மரங்கள் தனியாகவோ அல்லது கூட்டமாகவோ வளர்க்கப் படுகின்றன. இவை மாரிகாலத்தில் ஏற்படும் மழை வெள்ளத்தில் வயல் நிலங்கள் முழுமையாக மூடியுள்ள போது கிணறுகளையும் நீர்நிலைகளையும் அடையாளப்படுத்தும் காட்டிகளாக பயன்படுகின்றன. இதன் மூலமாக வெள்ள நீரில் மனிதர்களும் கால்நடைகளும் அறியாமல் கிணறுகள் மற்றும் நீர்நிலைகளில் விழுவது தவிர்க்கப்படுகின்றது. அத்துடன் மண் வரம்புகள் மற்றும் மண் திட்டிகள் குளக்கட்டுகள் என்பவற்றை மண்ணரிப்பில் இருந்து பாதுகாக்கவும் பயன்படுகின்றன. வயல் நிலங்களில் வேலை செய்வோர் இளைப்பாறுவதற்கு நிழலையும் வழங்குகின்றன.

வழுக்கியாற்று வடிநிலத்தில் வீடுகளும் காணிகளும் வேலிகளால் எல்லைப்படுத்தப்பட்டு காணப்படுகின்றன. ஒரு தசாப்தத்திற்கு முன்னர் வரை கிளுவை, சீமைக்கிளுவை, பூவரசு மற்றும் இப்பில் இப்பில் முதலிய மரங்கள் வேலியை ஆக்குவதற்கு எல்லையாக நடப்பட்டதுடன்



பனை, தென்னை ஓலைகளால் அடைக்கப்பட்டிருந்தன அத்துடன் சில வேளைகளில் பனை மட்டைகளும் இதற்கு பயன்படுத்தப்பட்டன.

அயலவர்களுக்கிடையில் தொடர்புகளை பேணுவதற்காக வேலிகளின் நடுவில் சிறிய வாயில்கள் காணப்பட்டன இவை கிராமத்தவர்களால் கடவை, பொட்டு எனும் பெயர்களால் அழைக்கப்படுவருகின்றன. தற்பொழுது இது போன்ற வேலிகள் வெகுவாக குறைந்துள்ளதுடன் பெருமளவில் கொங்கிரீட் தூண்கள் வேலிகளுக்கு நடப்பட்டு உலோகக் கூரைத் தகடுகளால் அடைக்கப்படுகின்றன. சில இடங்களில் கொங்கிரீட் மதில்களும் அமைக்கப்படுகின்றன.

முள்முருங்கை (Erythrina variegata) எனப்பட்ட ஒரு வகை மரம் இப்பகுதியில் அதிகமாக காணப்பட்டன. இம் மரமானது வேலிகளிலும் வெற்றிலை தோட்டங்களில் ஆதாரமாகவும் பெரும்பாலும் நடப்பட்டிருந்ததுடன் இதன் இலைகள் கால்நடைகளுக்கு உணவாகவும், மருத்துவத்தேவைக்கும் பயன்படுத்தப்பட்டன. அத்துடன் தமிழர் கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் விழாவான திருமணத்தின் போது “கன்னிக்கால்” ஆக முக்கியத்துவம் பெறுகின்றது. ஆனாலும் ஒரு வகை நோய்த்தாக்கம் காரணமாக இவ் இனம் இப் பிரதேசத்தில் அழிவடைந்து காண்பதற்கரிதாகி உள்ளது.

மரங்கள் செடிகள் என்பன அடர்த்தியாக வளர்ந்து புதர்களை தோற்றுவிக்கின்றன. இப் புதர்கள் பறவைகள் மற்றும் விலங்குகளின் வாழ்விடங்களாக அமைவதுடன் தாவர போசணிகளுக்கு உணவு வழங்கிகளாகவும் தொழிற்படுகின்றன. பொதுவாக மரங்களின் இலைகள் கால்நடைகளின் உணவாக கிராமத்தவர்களால் பயன்படுத்தப்படுகின்றன.

# பிறந்தநாள் வாழ்த்து

நண்பர் ஒருவர் அலைபேசியிலேயே மூழ்கிக் கிடந்தார். அவரை மீட்டு, உலகிற்கு கொண்டு வரலாமென்று அழைத்தேன். அதற்கு அவர், 'இருங்கள்! தினமும் முகநூலில் உள்ள நண்பர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துகளை பதிவிடுவது எனது வழக்கம். அதை முடித்துவிட்டு வருகிறேன்' என்று கூறினார்.

இப்பொழுதெல்லாம் பிறந்தநாள் என்பது வாட்ஸ் ஆப் மற்றும் பேஸ்புக் புலனங்களின் வாயிலாகவே அதிகம் வாழ்த்தப்படுகிறது. முகம் தெரியாதவர்களுக்கும், முகவரி அறியாதவர்களுக்கும் கூட, முகநூல் முகவரியாக அமைந்து, பிறந்தநாள் வாழ்த்துகள் பகிரப்பட்டு வருகின்றன.

'கற்றது கையளவு' என்பது இக்காலத்தில், 'கற்பது கையிலுள்ள அளவு' என்ற நிலைக்கு வந்துவிடுகிறது. வானத்தைக் கூட குனிந்து உள்ளங்கையில் அலைபேசியில் பார்க்கக்கூடிய காலமாக இக்காலம் இருக்கிறது. வெளி உலகம் என்பது இல்லாமல், இப்போது தனி உலகமாக மனிதர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். வீட்டிற்குள்ளேயே மனிதர்களுக்குள்ளே பேசும் வார்த்தைகள் குறைந்துவிட்டன. தொழில்நுட்பங்களே மனிதர்களை ஆட்டுவிக்கின்றன. உண்மையில் தொழில்நுட்பங்கள் மனிதர்களை ரோபோக்களாக ஆக்கிவிட்டன.



விழித்தவுடன், நடைபயிற்சியின்போது, சாப்பிடும்போது, உறங்கும்போது மட்டுமல்ல. இப்போதெல்லாம் அலுவலகமே புலனத்தின் வாயிலாகவே நடைபெறுகின்றன.

கிராமத்தில் அப்போதெல்லாம் பிறந்தநாள் என்ன என்பதே பலருக்குத் தெரியாமலிருக்கும். பேரன், பேத்திகள் ஓடிச்சென்று தாத்தா பாட்டியிடம் அவர்களின் பிறந்தநாளை ஆவலாகக் கேட்பதுண்டு. அவர்களுக்கு ஏதாவது பரிசை அளித்து மகிழ்விக்க வேண்டுமென்பது குழந்தைகளின் அன்பும், எதிர்பார்ப்பும், ஆசையும்.

ஆனால் அவர்கள் சிரித்துக் கொண்டெ, ஏதாவது தமிழ் மாதத்தை சொல்லி, அந்த மாதத்தில் பிறந்ததாக சொல்லி நாணுவார்கள்.

குழந்தைகளுக்கு தமிழ் மாதங்கள் அவ்வளவு தெரிந்திருக்காது. கற்பிக்க வேண்டிய கடமை நம்முடையது. பிறந்தநாளுக்கு வாழ்த்து அட்டைகள் அளித்து, வாழ்த்துகள் தெரிவித்து மகிழ்வது ஒரு காலத்தில் பிரசித்துப் பெற்ற வழக்கமாக இருந்தது.

விதவிதமான வாழ்த்து அட்டைகள் தேர்ந்தெடுத்து அளிப்பது, அவர்களின் வித்தியாசமான அன்பைக் காட்டுவதாக எண்ணுவர்.

அதிலும் குறிப்பாக கல்லூரிகள் என்றால் சொல்லவே வேண்டாம். பிறந்தநாளில் தான், நட்பையோ, காதலையோ வெளிப்படுத்துவர். சிலருக்கு பச்சை சிக்னல் கிடைக்கும். சிலருக்கு சிகப்பு சிக்னல் கிடைக்கும். சிலருக்கு ஆரஞ்சு சிக்னலும் கிடைக்கலாம்.

எந்த காலத்திலும் பிறந்தநாளுக்கு குறையாத ஒன்று என்றால் அது கவிதை தான். கவிதையை மாலையாகவே சூட்டிவிடுவர். கவிதை எழுதத் தெரியாதவர்களுக்கும்

இருக்கவே இருக்கிறது பல வலைதளங்கள். அதிலிருந்து தேடி எடுத்து பகிர்ந்து விடுவர்.



இந்த பிறந்தநாள் கொண்டாட்டம் இப்போதுதான் வந்ததா? கிருஷ்ண ஜெயந்தி, அனுமன் ஜெயந்தி, விநாயகர் சதுர்த்தி என இந்துக்கள் தங்கள் கடவுள்களின் பிறந்தநாளை துதித்து வருகின்றனர். கிறிஸ்தவர்களும் இயேசு அவதரித்த நாளைக் கொண்டாடுகின்றனர். புத்த பூர்ணிமாவும் கொண்டாடப்படுகிறது. ஆனால், பிறந்தநாளில் கேக் வெட்டும் மேற்கத்தியப் பழக்கம் நமக்கு ஆங்கிலேயர்களின் வருகையாலேயே அறிந்து பின்பற்றுகிறோம்.

கட்சிகளில் தலைவர்களின் பிறந்தநாள், அரசியலில் அடுத்தகட்ட நகர்விற்கு ஒரு சூழ்ச்சமாக உபயோகிக்கப்படும். ஒரு கூட்டணியிலிருந்து அடுத்த கூட்டணிக்குத் தாவ பிறந்தநாள் கூட சிவப்புக் கம்பளமாக விரியும்.

உண்மையில் பிறந்தநாள் தாயின் வயிற்றைக் கிழித்து, அவளின் நெஞ்சை நிறைத்த நாள். பத்துமாத அவளின் தவத்தைக் கலைத்து, வரத்தை அவள் பெற்ற நாள். ஆம், நாம் ஒவ்வொருவரும் ஒருவகையில் வரமே.

முன்னோர் கூறும் சில கதைகளில், பெற்ற வரங்களே கதைமாந்தர்களுக்கு சாபங்களாக மாறும். சில வரங்கள் தவமிருந்து பெற்றவர்களையே அழிக்கும் கதைகளை நாம் கேட்டிருக்கிறோம். அது வாழ்க்கையிலு நடப்பதுண்டு.



தந்தையக் கொன்ற மகன், தாயை துரத்திய மகன்.ஃமகள் என்று நாளிதழை புரட்டும்போது, அவர்கள் பெற்றெடுத்ததை விட, துரத்தப்பட்டபோது பெற்ற வலி மிகவும் கொடியது என்பது சிலருக்கு புரியும்.

கொரோனா நோயின் கொடிய காலத்தில் நாடே ஊரடங்கில் இருந்தபோது, ஆதரவற்றவர்களுக்கு உயிரையும் பொருட்படுத்தாமல் உதவிய உள்ளங்களும் உண்டு.

கொரோனா நோயின் அறிகுறியாக இருக்குமோ என்று பெற்ற தாயை, பேருந்து நிலையத்திலே விட்டுச் சென்ற, ஈவு இரக்கமற்ற மகனையும் கொரோனா காலம் நமக்குக் காட்டிவிட்டது. கொரோனாவைவிட, கொடியவனை நாம் பெற்றோமோ என்று அந்த தாய் வருந்தியிருக்கக் கூடும்.

அன்று, ஒருநாள் நானும் முகநுல் பார்த்தேன். நண்பர் ஒருவருக்கு பிறந்தநாள். ‘ஆகா! நம்முடன் கூடவே இருப்பவர் ஆயிற்றே. நம் சங்கத்தின் உறுப்பினர் ஆயிற்றே. எப்போதும் பிறந்தநாள் வாழ்த்துகளைப் பகிரும் சங்கத்தின் வாடஸ் ஆப் புலனக்குழுவில் முதல் ஆளாக அவரை நாம் வாழ்த்தி அவரை திகைக்க வைக்க வேண்டும்’ என்று மிகுந்த ஆசையோடு, அவருக்கு வியப்பைத் தர வேண்டும் என்ற எண்ணத்தில் குழுவில் வாழ்த்துகளைத் தெரிவித்தேன்.

அடுத்த சில நிமிடங்களில் வாழ்த்துகள் அவரது வித்தியாசமான ஒளிப்படங்களுடன் குவிந்தன.

சில நிமிடங்கள் கழித்து, அலைபேசி என்னை அழைத்தது. நண்பர் அழைப்பில். பிறந்தநாள் வாழ்த்து பதிவிட்டதற்கு நன்றி சொல்ல அழைக்கிறார் என்ற நினைப்போடு எடுத்தேன். ‘இன்றைக்கு எனக்கு பிறந்தநாளே இல்லை. ஏன் பதிவிட்டீர்கள். பதிவை நீக்குங்கள்’ என்றார். ‘உங்களின் முகநூலி இன்று பிறந்தநாள் என்று வருகிறதே. அதைப்பார்த்து தான் பதிவிட்டேன்’ என்றேன். அதற்கு அவர், ‘அது சான்றிதழில் உள்ள பிறந்தநாள். முகநூலில் முதலில் ஒருவர் வாழ்த்தியபோதே அவருக்கு அதை தெரிவித்து கமெண்ட் போட்டேனே. பார்க்க வேண்டியது தானே என்றார்

வியப்பார் என்று நினைத்தால், கடிந்து கொண்டார். அன்று முதல், முதலில் பிறந்தநாள் வாழ்த்துகள் கூறுவதை தவிர்த்துவிட்டேன். அலைபேசியில் அழைத்து உறுதிசெய்த பிறகே, வாழ்த்துவதுண்டு.

இதற்கெல்லாம் காரணம், அப்போதெல்லாம் எந்த மாதத்தில் பிறந்தாலும், பள்ளியில் சேர்க்க ஜுன் மாதத்தில் பிறந்ததாக பள்ளியில் பதிவு செய்து விடுவார்கள். பல பேருக்கு சான்றிதழின்படி, ஜுன் மாதமே பிறந்தநாள்.

அதுசரி, நம்முடைய பிறந்தநாளில் மற்றவர்கள் வாழ்த்துகளைப் பெறுவது இருக்கட்டும். மற்றவர்களுக்கு கைதட்டி வாழ்த்துவோமா? மரங்களை நடுங்கள். இலைகள் அசைகையில் அவைகள் உங்களுக்கும், மற்றவர்களுக்கும் கைகளைத் தட்டும்.



**சா.கா.பாரதி ராஜா,**
**பெரிய நத்தம்.**



# மூன்றாம் கண்

# மறுபக்கம்


கோபிபிரகாஷ் திருக்குமரநாதன்

மாறன் தாத்தாவினுடைய பழைய புத்தக அலுமாரியைத் தூசித்தட்டிக் கொண்டிருக்கின்றான். அப்பொழுது ஏதேச்சையாக கீழே விழுந்த லண்டன் பத்திரிகை ஒன்றின் முன்பக்க தலைப்பு அவனை தன்பக்கம் ஈர்த்தது.

"ஒருபகுதி நிறைவேறிவிட்ட, மற்றொரு பகுதி நிறைவேற்றுவதற்கான திசையை நோக்கிச் செல்கிற இந்த தீர்க்கதரிசன புத்தகத்தை பார்க்கின்றபோது என்ன நினைக்கத் தோன்றுகின்றது? இத்தனை காலம் கஷ்டப்பட்டு ஜேர்மனியின் மேலாதிக்கத்திலிருந்து தப்பித்து அதை விட பயங்கரமான யூத வலையில் சிக்குவதற்கா?"

இந்தச் செய்தியை பார்த்தவுடன் ஆர்வம் பீறிட்டு எண்ணிலடங்காக கேள்விகள் ஆழ்மனதில் வட்டமடித்து பறக்க "தாத்தா" என்று கத்தியவாறு அவரது அறைக்குள் விரைந்தான் மாறன்.லாக்டவுன் காலப்பகுதியில் Netflix இல் மோகன்லால் நடித்த LUCIFER படத்தை பார்த்த குஷியில் தன் மூக்குக்கண்ணாடியை சரி செய்தவாறே ஓடிவந்த பேரனை ஆரத்தழுவி "பேரான்டி அருமையான படம்டா . இலுமினாட்டி Conceptm வச்சு நல்லா எடுத்திருக்கானுகள். மலையாள சினிமா இப்ப வேற ரகம்தான் என" என்றார்.

மாறன் "அது இருக்கட்டும் தாத்தா என்ன இது ?இதுல என்ன புத்தகத்த பத்தி போட்டிருக்கு ?அதில சொன்னதுலாம் இப்ப நடந்திட்டா?" என்றான்




தாத்தா அதற்கு சிரித்தவாறே "சரியான நேரத்தில வந்து சரியான விடயத்தை பத்தி கேட்டிருக்காய் மாறா. நான் முன்னம் சொன்னனே இலுமினாட்டி(கோயிம்கள்) என்டு அவங்களோட ரகசியக்குறிப்புத்தான் இது. ஆரம்பத்தில இதை யூத வெறுப்புக்காரணமா யாரோ கிளப்பி விட்டது என்டுத்தான் சொன்னாங்கள். ஆனா அதுல சொல்லப்பட்டிருந்த விஷயத்துல பாதிக்கு மேல இப்ப வரைக்கும் அச்சு பிசகாம நடந்திட்டதால அத பொய்னு சொல்லி மறுக்கவும் ஏலாது" என்று கூற மாறன் இடையே குறுக்கிட்டு "அப்ப அவ்ளோ யோசிச்சவங்க இந்த புத்தகம் வெளிய வந்தோன சும்மாவா விட்டாங்கள்" என்றான்.

தாத்தா அவனது துடிப்பையும் ஆர்வத்தையும் கண்டு வியந்து "இந்த புத்தகத்தை வைத்திருப்பது சோவியத் ரஷ்யாவில் மரணத்தண்டனைக்குரிய குற்றமாக அந்த காலத்தில் கருதப்பட்டது" எனக்கூற மாறன் வாயடைத்துப்போய் தாத்தாவையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான். "அதுமட்டுமல்ல மாறா உலகிலேயே பைபிளுக்கு அடுத்து அதிகப்படியாக வாசிக்கப்பட்டப் புத்தகம் இதுதான் என்றும் கூறுவர். Protocols என்று அழைக்கப்படும் இந்த புத்தகம் அவர்களது கோயிம்களின் இரகசிய வகுப்புக்களின் போது வெளியுலகிற்கு கசிந்த குறிப்புக்களின் தொகுப்புத்தான்" என தாத்தா சொல்லிக்கொண்டிருக்க மாறன் "எதும் ஆதாரம் காட்டு தாத்தா" என்று இடையில் குறுக்கிட்டான்.

தாத்தா தன்னுடைய அலுமாரியில் இருந்து "Protocols Of Elders of the Zion" என்கின்ற ஆங்கில நூலின் தமிழ் மொழிப்பெயர்ப்பின் குறித்த ஒரு பக்கத்தை எடுத்து உரக்க வாசிக்கும்படி மாறனிடம் கொடுத்தார். மாறனும் ஆர்வம் தாங்காமல் தாத்தாவிடமிருந்து "லபக்" என்று வாங்கி சத்தமாக படித்தான்.

"அரசியல் சாசனத்தில் மக்களுக்கு நாம் வழங்கியிருக்கின்ற உரிமைகள் வெறும் ஏட்டளவில் மட்டுமே இருக்கும்."மக்கள் உரிமை" எல்லாம் வெறும் கற்பனையேத் தவிர எதார்த்த வாழ்வில் அது சாத்தியப்படாது. இரட்டிப்பு வேலைச்சுமையால் தொழிலாளர்கள் நசுக்கப்படுவார்கள் . வாழ்வின் பல நிலைகளிலும் அவர்கள் ஒடுக்கப்படுவார்கள். உளரிக்கொட்டும் மடையர்களுக்கு பேச்சுரிமை இருக்கிற நாட்டிலே,நல்லவற்றோடு தீயவற்றைக் கலந்து அர்த்தமற்ற வார்த்தைகளைக் கிறுக்கித்தள்ளும் பத்திரிகையாளர்களுக்கு எழுத்துரிமை இருக்கிற நாட்டிலே உழைக்கும் வர்க்கத்திற்கு எப்படி நியாயமான உரிமைகள் கிடைக்கும்?. உண்மையில்,அரசியல் சாசனத்தால் அவர்களுக்கு எந்த நன்மையும்




கிடையாது ,ஒன்றே ஒன்றைத்தவிர.அது நாம் அவர்களுக்கு வீசும் ரொட்டித்துண்டு. நமது ஏஜென்டுகளுக்குச் சேவகம் புரியும் வேலைக்காரர்களை ஆட்சியில் அமர்த்துவதற்காக ,நாம் கை காட்டும் ஆட்களுக்கு வாக்களிப்பதால்,பிரதி உபகாரமாக அவர்களுக்கு அதை வீசுகின்றோம். "உடனடியாக வாசிப்பை நிறுத்தி அதிர்ச்சி கலந்த மௌனத்தை கலைத்தவாறு மாறன் " இவர்கள் எந்த நாடுகளை ஆட்சி செய்கிறார்கள்? இவர்களுடைய ஏஜென்டுகள் எந்த நாட்டில் இருக்கின்றார்கள் ?" என்று தாத்தாவைக் கேள்விக்கணைகளால் துளைத்தான்.தாத்தா சத்தமாக சிரித்தவாறே " அவர்கள் ஆளுவது நாட்டை அல்ல மாறா இந்த உலகத்தை" என்றுச் சொல்ல மாறான் மூக்கிலே விரலை வைத்தான்.

மேலும் தொடர்ந்த தாத்தா "அவர்கள் குறிப்பிட்ட திட்டங்களில் கிட்டத்தட்ட 80மூ இற்கும் அதிமாக இன்றைய தேதி வரையில் நிறைவேறிவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும் மாறா."

1)ஊடகங்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து தங்கள் திட்டங்களுக்கு தகுந்தாற் போல் பிரச்சாரம் செய்தல்

2)இனம் ,மதம் ,வர்க்கம் ஆகியவற்றுக்கிடையே சண்டையை மூட்டி விடுதல்

3)லஞ்சம் கொடுத்தும் அச்சுறுத்தியும் ஆட்சியாளர்களையும் அதிகாரிகளையும் வழிக்கு கொண்டு வர வேண்டும்.

4) பொம்மை அரசாங்கங்களை நிறுவி ,தமக்கு சாதகமானவர்களை ஆட்சியாளர்களாக நியமிக்க வேண்டும்

5) மன்னராட்சியை ஜனநாயகம் கம்யூனிசம் உள்ளிட்டவற்றை கொண்டு இடம் மாற்றி இறுதியாக சர்வாதிகார ஆட்சியை செயல்படுத்த வேண்டும்

6)அறிவியலின் பெயரால் மதத்தை இல்லாதொழித்து உலோகாயதத்தையும் நாத்திகத்தையும் பரப்ப வேண்டும்

7)கல்வித்திட்டத்தைக் கட்டுப்படுத்தி மக்களின் சிந்தனையை மழுங்கடிக்க வேண்டும்

8)வரலாற்றை தம் வசதிக்கு ஏற்றாற் போல் திரிபுப்டுத்த வேண்டும்

9)பேராசை,சுகபோக வாழ்க்கை , பொழுதுபோக்கு ஆகியவற்றில் மக்களை மூழ்கடிக்க வேண்டும்.

10)குடும்ப அமைப்பைச் சீர்குலைக்ங வேண்டும்

11)தீவிரவாதத்தின் பெயரால் மக்களைப் பயமுறுத்திக் கட்டுக்கள் வைத்திருக்க வேண்டும்

12)உலகளாவிய உளவு வலைகளைப் பின்ன வேண்டும்

13)வறுமை என்னும் சங்கிலியால் மக்களைப் பிணைக்க வேண்டும்

14)முலதனத்தில் ஏகபோகத்தை நிலைநாட்ட வேண்டும்

15)பங்குச்சந்தையை ஊக்குவித்து நேர்மையான தொழிந்துறை வளர்ச்சியை நசுக்க வேண்டும்

16)சிறு குறு தொழில்களுக்கு வேட்டு வைத்து ,பெரு நிறுவனங்களை ஊக்குவிக்க வேண்டும்

17)வளர்ச்சியின் பெயரால் மக்களை ஏமாற்ற வேண்டும்

18)முறையான சட்டங்களுக்கு தவறான விளக்கம் கொடுத்து சட்டத்தைறையை முடக்க வேண்டும்

19)நீண்டகாலத் தவணை உடைய வெளிநாட்டுக்கடன்களைக் கொடுத்து நாட்டைச்சுரண்ட வேண்டும்.



என்று தாத்தா அடுக்கிக் கொண்டேச்செல்ல மாறன் உடனே "அதாவது இன்னைக்கு நம்ம நாட்ட சைனாக்காரன்ட அடகுவச்ச மாறி அதானே தாத்தா?என்ன இவனுகள் நடந்தது நடக்கிறது எல்லாத்தையும் அன்றே கணித்தார் சூர்யா மாறி புட்டு புட்டு வச்சிருக்கானுகள".தாத்தா சிரித்தவாறு மாறனின் தலையை வருடிக்கொண்டே "இப்பிடியே அவங்க திட்டமிட்டபடி நிகழ்ச்சிநிரலை காய் நகர்த்தினா அரசாங்கம் மேல சனத்துக்கு வெறுப்பு வந்திடும். அதைச்சாதகமா வச்சு உலகம் முழுக்க ஆட்சிக்கவிழப்புக்களை அரங்கேற்றிக் கொண்டே போனால் கடைசியா உலகத்தோட ஒட்டுமொத்த ஆட்சியையும் கைப்பற்றி அந்த உலக அரசாங்கத்துக்கு யூதப்பேரசர் ஒருவர் நியமிக்கப்படுவார். அவருக்கு மொத்த உலகமுமே மண்டியிட்டு மரியாதைச் செலுத்தும்.இதான் அவங்களோட மாஸ்டர் பிளான்" என்று சொல்லிமுடித்தார். அப்பொழுது அறைக்குள் வந்த மாறனின் தாயார் "மத்தியான சாப்பாடு சாப்பிடாம தாத்தக்கும் பேரனுக்கும் என்ன மாஸ்டர் ப்ளான் வேண்டி இருக்கு" எனக் கேட்க மாறன் தாத்தாவின் சைகையைப் புரிந்துக்கொண்டு புத்தகத்தை பின்னால் மறைத்தவாறு "அது ஒன்னுமில்ல மம்மி மாஸ்டர் வருது தானே அதான் எப்பிடிப் பார்க்கிற என்டு ப்ளான் பண்ரிக்கிட்டிருந்தம்" என்று மாறன் மொக்கையாக மழுப்ப தாத்தா உள்ளுக்குள் சிரித்தவாறு பேரனை அழைத்துக்கொண்டுச் சாப்பிடச்சென்றார்.

# சித்திராங்கதா

காவ்யமோகன்

## நெடுநாள் சந்தேகம்

பூமியை கரும்பட்டுப் போர்வையால் போர்த்தி யிருக்கிறது இரவு. இரவோடு பேரமைதி. ஆளரவமே இல்லாத வீதியில் குதிரைகளின் காலடிச்சத்தம் மட்டும் மாறாத சந்தத்தில் குறையாத வேகத்தில் கேட்டுக்கொண்டிருக்கிறது. அந்தக் குதிரைகளில் வருணகுலத்தானும் மகிழாந்தகனும் காங்கேசந்துறை நோக்கி விரைந்து கொண்டிருக்கிறார்கள். பொழுது புலர்வதற்குள் மாருதவல்லியை மீட்டாக வேண்டும் என்பது அந்தக்குதிரைகளுக்கு கூட புரிந்திருக்கிறது.


காரிருளை குழப்புகின்ற புள்ளியாய் ஒரு தீப்பந்த வெளிச்சம் வீதியோரமாய் சிறுதொலைவில் தெரிவதை மகிழாந்தகன் கண்டான். புரவியை நிறுத்தினான். வருணகுலத்தானும் புரவியை நிறுத்தி மகிழாந்தகனை பார்த்தான். அந்த தீப்பந்தம் அவர்கள் இருவர்க்குமே இனம்புரியாத ஒரு சந்தேகத்தை உண்டு பண்ணியது.

ஒலி எழாத வண்ணம் புரவியை விட்டிறங்கி தீப்பந்தத்தை நோக்கி மெதுவாய் நடக்கத் தொடங்கினான் மகிழாந்தகன். வருணகுலத்தானையும் தொடர்ந்து வரும்படி சமிக்ஞை செய்தான்.

தீப்பந்த வெளிச்சத்தில் யாரோ இருவர் பேசிக்கொண்டிருப்பதாய் தெரிந்தது. இன்னும் அருகில் சென்றதும் பேசிக் கொண்டிருப்பவர்களின் முகம் தெளிவாகவே தெரியத் தொடங்கியது. வருணகுலத்தானும் மகிழாந்தகனும் அதிசயித்து ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர்.

மகிழாந்தகனின் இன்னுமோர் நெடுநாள் சந்தேகமும் இப்போது தெளிவாகிறது. அது ராஜமந்திரி ஏகாம்பரம் தொண்டமனாரும், முன்னர் வருணகுலத்தானிற்கு ஈட்டி வீசிய ஊமைக்காத்தவராயனுமே ஆகும்.

இருவரையும் தெளிவாகவே இனங்கண்டு கொண்டாலும் அவர்கள் என்ன பேசிக்கொள்கிறார்கள் என்பது புரியவில்லை. மந்திரி சைகையிலே ஏதோ கேட்கிறார். காத்தவராயனும் சைகையிலே பதில் சொல்கிறான்.



திவாகரன்

இதனை மறைந்திருந்து பார்த்துக்கொண்டிருந்து மகிழாந்தகன் பொறுமையிழந்து 'மந்திரியாரே' என்று கூப்பிட்டான்.

குரல் கேட்ட திசை வழியே இருவரும் திடுக்கிட்டுப் பார்த்தனர். மகிழாந்தகனைக் கண்டதும் காத்தவராயன் தலைதெறிக்க ஓட ஆரம்பித்தான். அவனை விடாது துரத்திக்கொண்டே மகிழாந்தகனும் ஓடினான்.

வாடிய முகத்துடன் நின்றுகொண்டிருந்த ஏகாம்பரனாரை பார்த்து வருணகுலத்தான் குழப்பமடைந்தான்.

'மந்திரியாரே, இந்த இருட்டில் இங்கு என்ன செய்கிறீர்கள்? சிறையிலிருந்த காத்தவராயன் இங்கே எப்படி வந்தான்?'
என்று தொடரந்து தன் குழப்பங்களை எல்லாம் கேள்விகளாக்கினான்.

'தஞ்சைத்தளபதியாரே, நான் மிகுந்த பதற்றத்தில் இருக்கிறேன். மாருதவல்லியைத் தேடி எங்கெங்கோ எல்லாம் அலைந்துவிட்டேன். எந்தத் தகவலும் தெரியவில்லை'
என்று கூறி அழத்தொடங்கி விட்டார்.

வருணகுலத்தான் அமைதியாகவே நின்றான்.

'சிறையிலிருந்து காத்தவராயன் தப்பி ஓடிவிட்டதாக காவலர்கள் தகவல் சொன்னார்கள். மாருதவல்லியைக் காணவில்லை என்ற பதற்றத்தில் நான் எதையும் கண்டுகொள்ளாமல் என் போக்கில் புறப்பட்டுவிட்டேன். இந்தவழியில்தான் மறைந்திருந்த காத்தவராயனை எதேச்சையாகக் கண்டேன். எல்லாவற்றையும் மறந்து மாருதவல்லியை பற்றி மட்டுமே விசாரித்துக்கொண்டிருந்தேன். அவன் அந்த மிக்கபிள்ளையின் ஏவலாளி என்பது உண்மையாயின் அவனுக்கு மாருதவல்லியை பற்றி ஏதாவது தெரிந்திருக்கக்கூடும் என்றுதான் விசாரித்துக்கொண்டிருந்தேன். அதற்கிடையில் நீங்கள் இருவரும் வந்துவிட்டீர்கள்'
என்று சோகமான தொனியில் கூறிமுடித்தார் ஏகாம்பரனார்.

மகளைக் காணாது தவிக்கும் ஏகாம்பரனாரின் உள்ளத்தினை வருணகுலத்தான் புரிந்து கொண்டான்.

சிறையிலிருந்து தப்பியோடிய காத்தவராயனை கண்டதும் கைதுசெய்து அரசவையில் சேர்ப்பிக்காது தன்மகளை காப்பாற்றும் எண்ணத்தில் மட்டுமே மந்திரி செயற்பட்டது வருணகுலத்தானிற்கு ஏற்புடையதாக தெரியாவிட்டாலும் அதை மந்திரியாரிடம் சொல்லும் மனநிலையிலும் அவன் அப்போது இருக்கவில்லை. தன் கடமை, பொறுப்புக்களை எல்லாம் மறந்து புதல்வியைத் தேடி அலையும் தந்தையிடம் எதையும் சொல்வதற்கோ கேட்பதற்கோ வருணகுலத்தான் அப்போது விரும்பவில்லை.

அதற்கிடையில் மகிழாந்தகன் மூச்சுவாங்கியபடி அவ்விடம் வந்து சேர்ந்தான்.

ஊமையன் எங்கோ ஓடி ஒளிந்துவிட்டான். மந்திரியாரே, சிறையிலிருந்தவன் இந்தக்காட்டிற்கு எப்படி வந்தான் ?'

என்று மூச்சிளைத்தபடி கோபமாக கேட்டான் மகிழாந்தகன்.

சோகத்தில் வாடிநின்ற மந்திரியாரின் முகத்தை அவதானித்த வருணகுலத்தான்

'மகிழாந்தகரே, அவன் சிறையிலிருந்து தப்பி விட்டானாம். மாருதவல்லியைத் தேடி வந்தவழியில் மந்திரியார் அவனைக் கண்டிருக்கிறார்' என்றான்.

'சிறையிலிருந்து தப்பினானா? எப்படி? ஒருவேளை மந்திரியாரே அவனை இரகசியமாக விடுவித்தாரா? '

'சேனாதிபதி, என்ன கூறுகிறீர்கள்? தஞ்சைத்தளபதிக்கு ஈட்டி எறிந்து இராஜதுரோகம் செய்தவனை நான் எதற்கு இரகசியமாக விடுவிக்கப் போகிறேன். நானே மாருதவல்லியைத் தேடி அலைந்து மிகவும் களைப்பாக இருக்கிறேன். தயவு செய்து இப்படி அவதூறு பேசாதீர்கள் சேனாதிபதி'
என்றார் ஏகாம்பரனார்.

'நான் கண்டதைத்தானே பேசினேன். இதிலென்ன அவதூறு?'
என்று பதிலுக்குக் கேட்டான் மகிழாந்தகன்.

'மகிழாந்தகரே, எவ்வாறாயினும் அதைப்பின்னர் பார்த்துக் கொள்வோம். நாம் இப்போது மாருதவல்லியை மீட்க விரைந்தாக வேண்டும்'
என்று மகிழாந்தகனை சாந்தப்படுத்தினான் வருணகுலத்தான்.

'மந்திரியாரே, நீங்கள் கவலையுற வேண்டாம். வருத்திக்கொள்ளாமல் மனைக்குச் சென்று ஓய்வெடுங்கள். மாருதவல்லியை அழைத்துக்கொண்டு நாம் விரைவில் வருகிறோம். எந்தக்குழப்பமும் இல்லாமல் செல்லுங்கள்'

என்று மந்திரியாரைப்பார்த்து ஆறுதலாய்ச் சொன்னான் வருணகுலத்தான்.

'மிக்க நன்றி வீரரே, என் உடலில் இதற்கு மேல் தெம்பில்லை. ஆனால் மாருதவல்லியை காணும்வரை என் மனம் ஓயப்போவதில்லை. எப்படியாவது அவளை அழைத்துவாருங்கள். அவள் ஏதுமறியா சிறுபெண்...'

என்று கூறிமுடிப்பதற்குள் அடைத்துக்கொண்ட குரலோடு அவ்விடம் விட்டு விலகிச்சென்றார் மந்திரியார்.

அவர் சென்றதும் மகிழாந்தகன் வருணகுலத்தானை நோக்கி

'இவருக்கும் அந்த ஊமைக்காத்தவராயனுக்கும் இரகசிய தொடர்பு இருப்பதாய் நான் அப்போதே சந்தேகித்தேன். அரசவையில் அவனைக் காப்பாற்றுவதற்காக அன்று எவ்வளவு வாதாடினார் என்பது தங்களுக்கு நினைவு இருக்கிறதா? பெரிய அதிகாரி- அதுவும் அரசர் பெருநம்பிக்கை கொண்ட மந்திரியார் மீது சாட்சியமில்லாமல் குற்றம் சாடக்கூடாது என்பதால் அன்று அமைதியாக இருந்துவிட்டேன். ஆனால் இன்று கையுங்களவுமாக அகப்பட்டுக் கொண்டார். இப்போது மாருதவல்லியை மீட்க வேண்டிய அவசரம் என்பதால் மட்டுமே பொறுத்திருக்கிறேன். திரும்பி வந்து அரசரின் முன் அனைத்தையும் நிரூபிப்பேன்' என்றான்.

'இருக்கட்டும் மகிழாந்தகரே, நாம் இப்போது காலங்கழியாது விரைந்து காங்கேசந்துறைக்கு சென்றாக வேண்டும்'
என்று கூறியதும் இரண்டு புரவிகளும் புழுதி கிழம்ப புறப்படத்தொடங்கின.

ஆட்சியின் உயர் அதிகாரிகள் ஒரே நோக்கத்தோடு பயணித்தால் அந்த தேசத்தின்- அந்த இராச்சியத்தின் வெற்றி எப்போதும் கேள்விக்குறியாவதில்லை. ஆனால் அதுதான் என்றுமே நடந்ததில்லையே.

காத்திருங்கள்...



யாழ்ப்பாணத்தின் அடையாளமாகி விட்ட நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் வரவேற்பு வளைவு தை முதலாம் திகதி திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

**கருத்து : குணசேகரன்களும் கல்யாணிகளும் குறையப்போவதில்லை.**
**திரைப்படம் : பராசக்தி**
**எழுதியவர் : மு. கருணாநிதி**

# திரைத்தமிழ்



**குணசேகரன்:** இந்த நீதிமன்றம் விசித்திரம் நிறைந்த பல வழக்குகளைச் சந்தித்து இருக்கிறது. புதுமையான பல மனிதர்களைக் கண்டிருக்கிறது. ஆகவே இவ்வழக்கு விசித்திரமல்ல, வழக்காடும் நான் புதுமையான மனிதனுமல்ல. வாழ்க்கைப் பாதையிலே சர்வ சாதாரணமாகக் காணக்கூடிய ஜீவன்தான்.

கோவிலிலே குழப்பம் விளைவித்தேன். பூசாரியைத் தாக்கினேன். குற்றம் சாட்டப்பட்டிருக்கிறேன் இப்படியெல்லாம். நீங்கள் எதிர்பார்ப்பீர்கள், நான் இதையெல்லாம் மறுக்கப்போகிறேன் என்று. இல்லை நிச்சயமாக இல்லை. கோவிலிலே குழப்பம் விளைவித்தேன். கோவில் கூடாது என்பதற்காக அல்ல. கோவில் கொடியவர்களின் கூடாரமாய் இருக்கக்கூடாது என்பதற்காக. பூசாரியைத் தாக்கினேன். அவன் பக்தன் என்பதற்காக அல்ல. பக்தி பகல் வேஷமாகி விட்டதைக் கண்டிப்பதற்காக.

உனக்கேன் இவ்வளவு அக்கறை, உலகத்தில் யாருக்கும் இல்லாத அக்கறை, என்று கேட்பீர்கள். நானே பாதிக்கப்பட்டேன். சுயநிலம் என்பீர்கள். என் சுயநிலத்தில் பொதுநலம் கலந்திருக்கிறது. ஆகாரத்திற்காக அழுக்கைச் சாப்பிட்டு தடாகத்தைச் சுத்தப்படுத்துகிறதே மீன் □ அதைப் போல.

என்னைக் குற்றவாளி, குற்றவாளி என்கிறார்களே, இந்தக் குற்றவாளியின் வாழ்க்கைப் பாதையிலே கொஞ்ச தூரம் பின்னோக்கி நிடந்து பார்த்தால் அவன் கடந்து வந்துள்ள காட்டாறுகள் எவ்வளவு என்று கணக்கு பார்க்க முடியும். பாட்டொலிக்கும் குயில்கள் இல்லை என் பாதையில், படமெடுத்தாடும் பாம்புகள் நெளிந்திருக்கின்றன. தென்றலைத் தீண்டியதில்லை நான். ஆனால் தீயைத் தாண்டியிருக்கிறேன். கேளுங்கள் என் கதையை! நீதிபதி அவர்களே! தீர்ப்பு எழுதுவதற்கு முன் தயவு செய்து கேளுங்கள்.

தமிழ்நாட்டிலே இத்திருவிடத்திலே பிறந்தவன் நான். பிறக்க ஒரு நாடு பிழைக்க ஒரு நாடு. தமிழர்களின் தலையெழுத்துக்கு நானென்ன விதிவிலக்கா? ரங்கூன்! அது உயிரை வளர்த்தது. என்னை உயர்ந்தவன் ஆக்கியது. திருமணக் கோலத்தில் இருந்த என் தங்கையைக் காண வந்தேன். மோசடி வழக்கிலே ஈடுபட்டு இதோ குற்றவாளிக் கூண்டிலே உங்கள் முன் நிற்கிறாளே இந்த ஜாலக்காரி ஜூலி, இவள் வலையில் விழுந்தவர்களில் நானும் ஒருவன். பணப் பெட்டியைப் பறிகொடுத்தேன். பசியால் மெலிந்தேன் நலிந்தேன், கடைசியில் பைத்தியமாக மாறினேன்.

காண வந்த தங்கையைக் கண்டேன். கண்ணற்ற ஓவியமாக. ஆம் கைம்பெண்ணாக, தங்கையின் பெயரோ கல்யாணி. மங்களகரமான பெயர். ஆனால் கழுத்திலே மாங்கல்யமில்லை. செழித்து வளர்ந்த குடும்பம் சீரழிந்துவிட்டது. கையில் பிள்ளை. கண்களிலே நீர். கல்யாணி அலைந்தாள். கல்யாணிக்காக நான் அலைந்தேன்.

கல்யாணிக்குக் கருணை காட்டினர் பலர். அவர்களிலே காளையர் சிலர் அவளுடைய காதலைக் கேட்டனர். கொலை வழக்கிலே ஈடுபட்டு உங்கள் முன் நிற்கிறானே இக்கொடியவன் வேணு, இவன் பகட்டால் என் தங்கையைக் கற்பழிக்க முயன்றான். நான் தடுத்திராவிட்டால் கல்யாணி அப்போதே தற்கொலை செய்து கொண்டிருப்பாள்.

கடவுள் பக்தர்களும் கல்யாணிக்குக் கருணை காட்ட முன்வந்தார்கள். பிரதி உபகாரமாக அவள் கடைக்கண் பார்வையைக் கேட்டனர். அதில்

தலையானவன் இந்தப் பூசாரி. கல்யாணியின் கற்பைக் காணிக்கையாகக் கேட்டிருக்கிறான் □ பராசக்தியின் பெயரால், உலக மாதாவின் பெயரால். கல்யாணி உலகத்தில் புழுவாகத் துடித்தபடியாவது உயிரோடு இருந்திருப்பாள். அவளைத் தற்கொலை செய்து கொள்ளத் தூண்டியது இந்த பூசாரிதான். தன் குழந்தையை இரக்கமற்ற உலகத்தில் விட்டுச் செல்ல அவள் விரும்பவில்லை. தன் குழந்தை ஆதரவற்றுத் துடித்துச் சாவதைக் காண அவள் விரும்பவில்லை. அவளே கொன்றுவிட்டாள். விருப்பமானவர்களைக் கொல்வது விந்தையல்ல. உலக உத்தமர் காந்தி, அஹிம்சா மூர்த்தி ஜீவகாருண்ய சீலர், அவரே நோயால் துடித்துக் கொண்டிருந்த கன்று குட்டியைக் கொன்றுவிடச் சொல்லியிருக்கிறார், அது கஷ்டப்படுவதைக் காணச் சகிக்காமல். அந்த முறையைத்தான் கையாண்டிருக்கிறாள் கல்யாணி. இது எப்படி குற்றமாகும்?

என் தங்கை விட்டுக் கொடுத்திருந்தால், கோடீஸ்வரன் பள்ளியறையிலே ஒரு நாள் □ மானத்தை விலை கூறியிருந்தால், மாளிகை வாசியின் மடியிலே ஒரு நாள் □ இப்படி ஓட்டியிருக்கலாம் நாட்களை. இதைத்தானா இந்த நீதிமன்றம் விரும்புகிறது?

பகட்டு என் தங்கையை மிரட்டியது. பயந்து ஓடினாள். பணம் என் தங்கையைத் துரத்தியது. மீண்டும் ஓடினாள். பக்தி என் தங்கையை பயமுறுத்தியது. ஓடினாள் ஓடினாள் வாழ்க்கையின் ஓரத்திற்கே ஓடினாள். அந்த ஓட்டத்தைத் தடுத்திருக்கவேண்டும். வாட்டத்தைப் போக்கியிருக்கவேண்டும். இன்று சட்டத்தை நீட்டுவோர். செய்தார்களா? வாழவிட்டார்களா என் கல்யாணியை?

**அரசு வக்கீல்:** குற்றவாளி யார் யார் வழக்கிற்கோ வக்கீலாக மாறுகிறார்.

**குணசேகரன்:** யார் வழக்கிற்குமில்லை. அதுவும் என் வழக்குதான். என் தங்கையின் வழக்கு. தங்கையின் மானத்தை அழிக்க எண்ணிய மாபாவிக்கு புத்தி புகட்ட அண்ணன் ஓடுவதில் என்ன தவறு? கல்யாணி தற்கொலை செய்துகொள்ள முயன்றது ஒரு குற்றம். குழந்தையைக் கொன்றது ஒரு குற்றம். நான் பூசாரியைத் தாக்கியது ஒரு குற்றம்.

இத்தனைக் குற்றங்களுக்கும் யார் காரணம்? கல்யாணியைக் கஞ்சிக்கில்லாமல் அலையவிட்டது யார் குற்றம்? விதியின் குற்றமா? அல்லது விதியின் பெயரைச் சொல்லி வயிறு வளர்க்கும் வீணர்களின் குற்றமா? பணம் பறிக்கும் கொள்ளைக் கூட்டத்தை வளரவிட்டது யார் குற்றம்? பஞ்சத்தின் குற்றமா? அல்லது பஞ்சத்தை மஞ்சத்திற்கு வரவழைக்கும் வஞ்சகர்களின் குற்றமா? கடவுள் பெயரால் காம லீலைகள் நடத்தும் போலிப் பூசாரிகளை நாட்டிலே நடமாட விட்டது யார் குற்றம்? கடவுளின் குற்றமா? அல்லது கடவுளின் பெயரைச் சொல்லி காலட்சேபம் நடத்தும் கயவர்களின் குற்றமா? இக்குற்றங்கள் களையப்படும் வரை குணசேகரன்களும் கல்யாணிகளும் குறையப்போவதில்லை. இதுதான் எங்கள் வாழ்க்கை ஏட்டில் எந்தப் பக்கம் புரட்டினாலும் காணப்படும் பாடம், பகுத்தறிவு, பயனுள்ள அரசியல் தத்துவம்.

## தூமியின் அறப்பணிகள்

**Wnso New** அமைப்பினரால் "சிறார்களின் கல்விசார் தேவைகளை பூர்த்தி செய்தல்" என்ற தொனிப்பொருளில் முன்னெடுக்கப்பட்ட கல்விசார் திட்டத்திற்கு தூமி அமைப்பினரால் மாணவர்களின் புத்தகப்பைகள் வழங்கி வைக்கப்பட்டது.



# 3 மந்திர மெஸ்ஸி

தீரன்

இயல்பிலேயே அமைதியான சுபாவமுடைய மெஸ்ஸிக்கு புது அணியில் சக வீரர்களுடன் நட்புடன் பழகுவதென்பது சற்று சவாலாகவே இருந்தது. மைதானத்தில் பயிற்சியின் போது அவரது கால் பேசும் அளவிற்கு கூட சக வீரர்களிடம் அவர் வாய் பேசுவதில்லை. இதனால் சக அணிவீரர்களால் கேலிக்குள்ளாக்கப்பட்டார். இருந்தாலும் அவரது அதீத திறமை அனைவரையும் அவரை நோக்கி வசீகரித்தது. தொடர் பயிற்சிகளாலும், விடா முயற்சிகளாலும் 2002 பெப்ரவரி மாதம் ஸ்பெயின் நாட்டின் கால்பந்தாட்ட சம்மேளனம் அனுமதி கொடுக்க மெஸ்ஸி உத்தியோகபூர்வமாய் இளைஞர் அணியில் உள்வாங்கப்பட்டார். இளைஞர் அணியில் தற்போதைய பார்சிலோனா அணியின் டிபெண்டரானா gerad pique இனதும் முன்னாள் பார்சிலோனா வீரரான cesc fabergas இனதும் நட்பு கிடைத்தது.

ஸ்பெயின் நாட்டின் இளைஞர் கழகங்கள் இடையே சிம்ம சொப்பனமாக இருந்த பார்சிலோனா அணியினை baby dream team என்று கால்பந்து வல்லுநர்கள் அழைத்தனர். அதில் மெஸ்ஸி தனது முதலாவது வருடத்திலேயே கலக்கி 30 போட்டிகளில் 36 கோல்களை பதிவு செய்தார். இவரது ஆட்டம் யார் கண்ணில் பட்டதோ இல்லையோ இங்கிலாந்தின் சிறந்த அணியான ஆர்சனல் அணியின் முகாமையாளர் arsene wenger கண்ணில்ப்பட்டது. அதனால் அவர் சில மில்லியன்களுக்கு மெஸ்ஸியை தனது அணியில் எடுக்க முயற்சி செய்தார். ஆனாலும் தனக்கு உதவிய அணியினை விட்டு செல்ல மனம் இன்றி அந்த வாய்ப்பை மறுத்தார் மெஸ்ஸி. அத்துடன் பார்சிலோனா அணியில் ஒரு தடத்தை பதிப்பதில் உறுதியாக இருந்தார்.



2003 காலப்பகுதில் பணபலத்தாலும் அரசியல் பலத்தாலும் ரியல் மாட்ரிட் அணியின் ஆதிக்கமே ஸ்பெயின் நாட்டில் அதிகமாக காணப்பட்டது. அத்துடன் luis figo போன்ற பார்சிலோனா அணியின் சிறந்த வீரர்களை தந்திரமான முறையில் தனது அணிக்குள் எடுத்து மற்ற அணிகளை பலவீன படுத்திய காலம் அது. அந்த சந்தர்ப்பத்தில் இளைஞர் அணியில் கலக்கிய மெஸ்ஸிக்கு பிரதான அணியுடன் பயிற்சி செய்யும் வாய்ப்பு கிடைத்தது. அங்கு அவரது திறமைகளை கவனித்த அப்போதைய பார்சிலோனா அணியின் முகாமையாளரான frank rijkaard அவருக்கு பிரதான அணியில் ஆடும் வாய்ப்பை 16 வயதில் வழங்கினார். போர்த்துகீஸின் போர்டோ அணிக்கு எதிரான நட்பு ஆட்டத்தில் மெஸ்ஸி 75 வது நிமிடத்தில் பார்சிலோனா பிரதான அணிக்கு அறிமுகம் செய்யப்பட்டார். அந்த ஆண்டின் இறுதியில் பார்சிலோனா அணியில் சேர்ந்த நட்சத்திர ஆட்டக்காரரான ronaldinho மெஸ்ஸியின் திறமையை கண்டு பாராட்டினார். அதோடு நில்லாது அவரை தனது சகோதரன் போல பாவித்து ஆதரவு அளித்தார்.

என்னதான் மெஸ்ஸி இயல்பாகவே நல்ல திறமை படைத்தாலும் அவரது வயதும் வளர்ச்சியும் பிரதான அணிக்கு ஏற்றதாக அப்போது அமையவில்லை. அதனால் அவர் பிரதான அணியின் B அணியில் இணைக்கப்பட்டார். அத்துடன் அவர் உடல் வலிமையை அதிகரிக்க அவருக்கென பிரத்தியேக மருத்துவர் மற்றும் போசணையாளரை பார்சிலோனா நிர்வாகம் வழங்கியது. 1 வருட சிறந்த கண்காணிப்பின் பின் பிரதான அணிக்கான உடல்வலிமை மற்றும் மனவலிமை பெற்ற மெஸ்ஸியை பிரதான அணி மீண்டும் 2004 ஆண்டு தன்னணிக்குள் உள்வாங்கியது.

***ஓய்வு தந்த வலிமையும், வேட்கையும் சேர்ந்த புதிய மெஸ்ஸியை அடுத்த இதழில் காண்போம்...***